வடமாகாண சித்த மருந்து
உற்பத்திப்பிரிவில் தயாரிக்கப்படுகின்ற

# சித்த மருந்து செய்முறைத் தொகுப்பு



சுதேச மருத்துவத் திணைக்களம்

வடக்கு மாகாணம்

2022

வட மாகாண சுதேச மருந்து உற்பத்திப்பிரிவில் தயாரிக்கப்படுகின்ற

# சித்த மருந்து செய்முறைத் தொகுப்பு

## 2022

**மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்,**

**வடக்கு மாகாணம்**

# தயாரிப்புக்குழு

- ***Dr. திருமதி. K. ஜெபநாமகணேசன் BSMS, M.Sc in Hospital Management***
- ***Dr. திருமதி. K. சௌந்தர்ராஜன் BSMS, MD Siddha Pathology***
- ***Dr. திருமதி. S. சுதாமதி BSMS, MD Siddha Pharmacology***
- ***Dr. K. செல்வநாதன் BSMS, PGD – Kayachikitcha (Reading)***
- ***Dr. S. கனகசுந்தரம் BSMS, MD Siddha Gunapadam, Dip. in Varma***
- ***Dr. திருமதி. V. ஆனந்தஜோதி BSMS, M.Phil. in Siddha Medicine***
- ***Dr. திருமதி. T. கலைச்செல்வி BSMS, MD Siddha Toxicology***
- ***Dr. R. அஜந்தன் BSMS, MD Siddha General Medicine***
- ***Dr. P. தவகீதன் BSMS, MD Siddha General Medicine***
- ***Dr. M. துஸ்யந்தன் BSMS, MD Siddha Pathology***
- ***Dr. S. தனரஞ்சன் BSMS, MD Siddha Gunapadam***

# கௌரவ ஆளுநர் அவர்களின் வாழ்த்துச்செய்தி



**வட மாகாண ஆளுநர் அவர்களின் வாழ்த்துச் செய்தி**

வட மாகாண சுதேச மருந்துவத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் "சித்த மருந்து செய்முறை தொகுப்பு" கை நூலிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சித்த மருந்து செய்முறை தொகுப்பு கை நூலினை வெளியிடுவதன் ஊடாக பொது மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதுடன் இதன்மூலம் சித்த மருந்தினை தயாரிப்பதற்கு ஊக்குவிப்பதுடன் இளம் மருத்துவர்களை தூண்டுவதற்கும் உருவாக்குவதற்கும் எடுத்த முயற்சி பாராட்டத்தக்கது. இவ்வாறான முயற்சிகள் மேலும் சிறக்க வேண்டும் என்பதோடு மக்கள் மத்தியில் சுதேச மருத்துவத்தின் விழிப்புணர்வு அதிகரித்து சித்த மருத்துவ முறைமைக்குள் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள தூண்டுகோலாக அமையும் என்பதில் ஐயமில்லை. தாங்களது பணி மேலும் சிறக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பீ.எஸ்.எம் சார்ள்ஸ்
ஆளுநர்
வட மாகாணம்

# Blessing from Chief Secretary



Launching of "Collection of Preparation Method of Herbal Medicine" described with details on usage, mode of action, indications and dosage, extracted from the ancient siddha Ayurveda remedial collections by the Department of Indigenous Medicine is much commended.

Sidha Ayurvedha medicines, conjoined with natural medicinal plants, had prepared by the earliest local general practitioner (Naddu Vaithiyar) at the homes by using traditional tools/ utensils, observing cultural and religious norms. This ayurvedha treatment had been fairly mixed with divine supremacy as the most medicinal plants were adored as God/ Goddess by ancient people.

This traditional but very powerful medicines should be treasured by us and conveyed hereditarily with generating awareness and knowledge of our forthcoming generation.

Consequently, the Department of Indigenous Medicines of NPC has taken up the responsibility for preserving the preparation methods of herbal medicines with modified details in new ways for home level products.

Congratulations to the Department of Indigenous Medicine for the efforts on manufacturing of herbal medicines and wishes for future achievements in the sector of Sidha Ayurvedha.

S.M.Saman Bandulasena

Chief Secretary

# செயலாளர் அவர்களின் வாழ்த்துச்செய்தி



வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் வெளியிடப்பட இருக்கும் சித்த மருந்து செய்முறைத் தொகுப்பு எனும் நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சுதேச மருத்துவத் திணைக்களமானது வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் ஒரு திணைக்களமாகும். மக்களுக்குரிய இத் திணைக்களமானது சுதேச மருத்துவத்தினூடாக மக்களுக்கான நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சையினை வழங்கி வருகின்றது. அத்துடன் மாகாண சுதேச மருந்து உற்பத்தி பிரிவினூடாக வைத்தியசாலைகளிற்குத் தேவையான சித்த மருந்துகள் உற்பத்தி செய்யப்படுவதுடன் இத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சித்த மருந்து விற்பனை நிலையங்களிலும் இம் மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன.

எனவே இங்கு தயாரிக்கப்படும் மருந்துகளின் செய்முறைகளை உள்ளடக்கியதாக சித்த மருந்து செய்முறைத் தொகுப்பு எனும் நூல் வெளிவருவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். இந் நூலினூடாக மருந்து உற்பத்திப் பிரிவில் தயாரிக்கப்படும் மருந்துகளின் தரம் உறுதி செய்யப்படும். எனவே சுதேச மருத்துவத் திணைக்களத்தின் இம் முயற்சிக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இதற்காக பாடுபட்டு உழைத்தவர்களிற்கு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. கனகேஸ்வரன்
செயலாளர்,
சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்ததை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு,
வடக்கு மாகாணம்.

# உள்ளடக்கம்


| தொட. .இல | மருந்துகளின் பெயர்கள் | பக்க .இல |
|---|---|---|
| 1 | அமுக்கரா சூரணம் | 1 |
| 2 | அட்ட சூரணம் | 2 |
| 3 | இலகுவிரேச்சன சூரணம் | 3 |
| 4 | ஏலாதிச் சூரணம் | 4 |
| 5 | சிவதைச் சூரணம் | 5 |
| 6 | தாளிசாதிச் சூரணம் | 6 |
| 7 | தாளிசாதிச் சூரணம் -II | 7 |
| 8 | திரிபலாச் சூரணம் | 9 |
| 9 | நிலபாகல் சூரணம் | 10 |
| 10 | பஞ்சதீபாக்கினிச் சூரணம் | 11 |
| 11 | பாஸ்கரலவணச் சூரணம் | 12 |
| 12 | மல்லிச் சூரணம் | 14 |
| 13 | மதுமேகச் சூரணம் | 15 |
| 14 | மாதுளையோட்டுச் சூரணம் | 16 |
| 15 | முடக்குச் சூரணம் | 17 |
| 16 | நீரிழிவுச் சூரணம் | 19 |
| 17 | வெண்தாமரையாதிச் சூரணம் | 20 |
| 18 | அசைச் சூரணம் | 21 |
| 19 | வல்லாரைச் சூரணம் | 22 |
| 20 | ஆமணக்கம் வேர்க் குடிநீர் | 23 |
| 21 | பறங்கிப்பட்டைக் குடிநீர் | 24 |
| 22 | பட்டோலாதி குடிநீர் | 25 |
| 23 | புணர்ணவாஸ்டக குடிநீர் | 26 |
| 24 | ராசனாசப்தக குடிநீர் | 27 |
| 25 | திரிகடுகாதிக் குடிநீர் | 28 |
| 26 | ஆடாதோடைக் குடிநீர் | 29 |
| 27 | நிலவேம்புக் குடிநீர் | 30 |
| 28 | நாக்குப்பூச்சிக் குடிநீர் | 31 |
| 29 | சிரவில்வாதிக் குடிநீர் | 32 |
| 30 | புஸ்கர மூலாதிக்குடிநீர் | 33 |
| 31 | ஆவிரைக்குடிநீர் | 34 |
| 32 | பிரப்பங்கிழங்காதிக் குடிநீர் | 35 |
| 33 | பித்தசமன லேகியம் | 36 |
| 34 | அமுக்கரா லேகியம் | 38 |
| 35 | நெல்லிக்காய் லேகியம் | 39 |
| 36 | ஆடாதோடை கண்டங்கத்தரி லேகியம் | 41 |
| 37 | ஆடாதோடைப் பாணி | 43 |
| 38 | அரபன் பற்பொடி | 44 |

| | | |
|---|---|---|
| 39 | பாலசஞ்சீவி மாத்திரை | 45 |
| 40 | சின்னச் சிவப்பு மாத்திரை | 46 |
| 41 | தக்காளிச்சாற்று கோரோசனை மாத்திரை | 47 |
| 42 | பலவாயுக் குளிகை | 49 |
| 43 | பலவாயுக் குளிகை (நேர்வாளம் சேராதது) | 51 |
| 44 | சுவாசக் குடோரி மாத்திரை | 53 |
| 45 | நீர்க்கோவை மாத்திரை | 54 |
| 46 | காக்கணவன் மாத்திரை | 55 |
| 47 | உரை மாத்திரை | 56 |
| 48 | முருக்கம் வித்து மாத்திரை | 57 |
| 49 | புன்னை வேர்க்குளிகை | 58 |
| 50 | வெள்ளை வெங்காய குளிகை | 59 |
| 51 | அன்னபேதிச் செந்தூரம் | 61 |
| 52 | படிகலிங்க செந்தூரம் | 62 |
| 53 | பூங்காவி செந்தூரம் | 63 |
| 54 | ஆறுமுக செந்தூரம் | 64 |
| 55 | சிலாச்சத்து பஸ்பம் | 65 |
| 56 | குங்கிலிய பஸ்பம் | 66 |
| 57 | பலகறைப்பற்பம் | 67 |
| 58 | இடிவல்லாதிமெழுகு | 68 |
| 59 | கந்தக இரசாயனம் | 70 |
| 60 | தாழங்காய் எண்ணெய் | 72 |
| 61 | நாசிரோகநாசத் தைலம் | 74 |
| 62 | கிரந்திஎண்ணெய் | 75 |
| 63 | வாதகேசரித் தைலம் | 77 |
| 64 | பொன்னாங்காணித் தைலம் | 78 |
| 65 | உழுந்துத் தைலம் | 79 |
| 66 | கரப்பான் தைலம் | 80 |
| 67 | சிரங்குத் தைலம் | 81 |
| 68 | அறுகங்கட்டைத் தைலம் | 82 |
| 69 | அறுகங்கட்டைத் தைலம் -II | 83 |
| 70 | சிவப்பு குக்கில் தைலம் | 84 |
| 71 | கார்போகித் தைலம் | 85 |
| 72 | கற்பூராதித் தைலம் | 86 |
| 73 | பச்சைஎண்ணெய் | 87 |
| 74 | சரசபாதித் தைலம் | 88 |
| 75 | லகு விஷமுட்டித் தைலம் | 89 |
| 76 | குப்பிளாய்ப் பசை | 90 |
| 77 | மருதம்பட்டை சூரணம் | 91 |
| 78 | மொசுமொசுக்கை சூரணம் | 92 |

| | | |
|---|---|---|
| 79 | வெங்காரபற்பம்/ வெண்காரபற்பம் | 93 |
| 80 | ஆவாரம்பூ தீநீர் | 94 |
| 81 | ஜாத்ஜாதிகிருதம் | 95 |
| 82 | மந்தாரப்பட்டை சூரணம் | 96 |
| 83 | திப்பலி இராசாயனம் | 97 |
| 84 | தில தைலம் | 99 |
| 85 | விடங்காதி சூரணம் | 100 |
| 86 | தாளிசாதி வடகம் | 101 |
| 87 | குந்திரிகத் தைலம் | 102 |
| 88 | நாவற்கொட்டை மாத்திரை | 103 |
| 89 | தொண்டை தாபிதம் அகற்றி மாத்திரை | 104 |
| 90 | திரிகடுகுச் சூரணம் | 105 |
| 91 | கழற்சிச் சூரணம் | 106 |
| 92 | சிற்றாமுட்டி மடக்கு தைலம் | 107 |
| 93 | நொச்சித் தைலம் | 108 |
| 94 | அமுக்கரா கிழங்கு சூரணம் | 109 |
| 95 | கரிசாலை கற்பம் | 110 |

# 01. அமுக்கரா சூரணம் (Amukkara Chooranam)

## சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | சுக்கு | වියළි ඉඟුරු | *Zingeber officianale* | 10g |
| 02 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 10g |
| 03 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 10g |
| 04 | இலவங்கப்பத்திரி | ලවංගපත්‍ර | *Cinnamomum zeylanicum* | 10g |
| 05 | கராம்பு | කරාබුනැටි | *Syzygium aromaticum* | 10g |
| 06 | குரோசாணிஓமம் | කොරොසානි | *Hyoscyamus niger* | 10g |
| 07 | சாதிக்காய் | සාදික්කා | *Myristica officianalis* | 10g |
| 08 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 10g |
| 09 | கடுகுரோகிணி | කටුකරෝසන | *Picorrhiza kurroa* | 10g |
| 10 | அமுக்காரா (சுத்தி) | අමුක්කරා | *Withania somnifera* | 180 g |
| 11 | சீனி | සීනි | Sugar | 270 g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

## செயலாற்றும் முறை (Mode of action)

கேடடைந்த சமானவாயு, சரியான பாதையில் செல்லாத வியானவாயு, வாத அதிகரிப்பால் மேலெழுந்த பித்ததோஷம், ஜாடராக்கினி மந்தம் என்பவற்றைச் சீர்செய்யும்.

## செய்கை (Action)

இன்பம் பெருக்கி (Aphrodisiac), அகட்டுவாய்வு அகற்றி (Carminative), பசித்தீதூண்டி (Digestive), வேதனாசாந்தினி (Analgesic), வாதசமனி (Anti vatha), பித்தசமனி (Anti piththa).

## தீரும் நோய்கள் (Indications)

வாதரோகங்கள், அழல்வாதம், பித்தவாய்வு, அரோசகம், குத்து, பிடிப்பு

## பிரமாணம் (Dosage)

ரோகநிலைக்கேற்ப 1–3 கி தினம் இருவேளை / மூன்றுவேளை சாப்பாட்டின் பின்
(1 -3g 2 – 3 times a day, after meal)

## அனுபானம் (Adjuvant)

தேன்/ பால் / நெய் (Honey, Milk, Ghee)

**Reference : - கண்ணுச்சாமி பரம்பரை வைத்தியம்.**

# 02. அட்ட சூரணம் (Adda Chooranam)

## சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 10 g |
| 02 | பெருங்காயம் | පෙරුම්කායම් | *Ferula asafoetida* | 20 g |
| 03 | இந்துப்பு | සහිඳලුණු | *Sodium chloride impura* | 30 g |
| 04 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 40 g |
| 05 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 50 g |
| 06 | கருஞ்சீரகம் | කළුදුරු | *Nigella sativa* | 60 g |
| 07 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 70 g |
| 08 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 80 g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
கோளாறடைந்த ஜாடராக்கினியையும், பாசக பித்தத்தையும் சீர்செய்யும். கேடடைந்த அபான வாயுவின் கீழ்முக செல்லுகையை மேம்படுத்தும்.

**செய்கை (Action)**
உடல்தேற்றி (Alterative), இசிவகற்றி (Anti spasmodic), வேதனாசாந்தினி ( Analgesic), அகட்டுவாயுவகற்றி (Carminative), பசித்தீதூண்டி (Digestive).

**தீரும் நோய்கள் (Indications)**
செரியாமை, பசியின்மை, வயிற்றுவலி, வாதகுன்மம், கெற்பவாயு, வாயுக்கோளாறுகள்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1–3கி தினம் இரு/மூன்று வேளை சாப்பாட்டிற்கு ½மணி முன்
(1 -3g 2-3 times a day ½ an hour before meal)

**அனுபானம் (Adjuvant)**
நெய் / வெந்நீர்/ மோர் (Ghee/ Warm water/ Buttermilk)

**Reference :- சித்த மருந்து முறையியல்.**

## 03. இலகுவிரேச்சன சூரணம் (Ilakuvirechchana Chooranam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | சூரத்து நிலாவாரை | සෙනෙහෙකොළ | *Cassia senna* | 120 g |
| 02 | கடுக்காய் தோல் | අරළු | *Terminalia chebula* | 120 g |
| 03 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 60 g |
| 04 | ரோசாப்பூ | රෝසමල් | *Rosa damascene* | 60 g |
| 05 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 30 g |
| 06 | சிவதை (சுத்தி) | තිරස්සවාලු | *Ipomea turpenthum* | 30 g |
| 07 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 15 g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
அபானவாயுவை சீர்படுத்தி மலத்தின் நீர்த்தன்மையை அதிகரித்து இலகுவாக மலத்தை வெளியேறச் செய்யும்.

**செய்கை (Actions)**
இலகுமலகாரி (Laxative), குருதித்தூய்மையாக்கி (Blood Purificant)

**தீரும் நோய்கள் (Indications)**
மலக்கட்டு, தோல் நோய்கள்

**பிரமாணம் (Dosage )**
ரோகநிலைக்கேற்ப 1–5கி இரவு மட்டும் (1 -5g Noct)

**அனுபானம் (Adjuvant)**
சீனி / பனங்கட்டி / சர்க்கரை (Sugar/ Palm Jaggery /Jaggery)

**Reference :- சித்த மருந்து முறையியல்.**

## 04. ஏலாதிச் சூரணம் (Elathy Chooranam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | கராம்பு | කරාබු නැටි | *Syzygiumaromaticum* | 10g |
| 02 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 20g |
| 03 | சிறுநாகப்பூ | නාමල්රේණු | *Mesua Ferrea* | 40g |
| 04 | தாளிசபத்திரி | තාලිසපත්‍ර | *Abies webbiana* | 80g |
| 05 | கூகைநீறு | අරලුප්පිටි | *Maranta Arundinaceae* | 160g |
| 06 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeberofficianale* | 320g |
| 07 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 640g |
| 08 | சீனி | සීනි | Sugar | 1270g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**

அதிகரித்த பித்தம்,வாதம் ஆகியவற்றை சீர் செய்வதன் மூலம் ஏழு உடற்கட்டுக்களிலும் முத்தோஷ சமநிலையைப் பேணும் அத்துடன் தாது ஷீண நிலையையும் சீர் செய்யும்.

**செய்கை (Actions)**

தாபிதமகற்றி (Anti inflammatory) , பசித்தீதூண்டி ( Digestive), கபகாரி (Anti kapha) , குளிர்ச்சியுண்டாக்கி (Refrigerant), வாந்தியடக்கி (Anti emetic).

**தீரும் நோய்கள் (Indications)**

பித்தவாயு, கிரந்தி, விரணம் , அரிகிரந்தி, சில்விசம், குட்டம், குறைநோய், பெரும்பாடு, எலும்புருக்கி.

**பிரமாணம் (Dosage)**

ரோகநிலைக்கேற்ப 1–2கி தினம் இரு வேளை / மூன்று வேளை சாப்பாட்டின் முன்
(1 -2g 2 – 3 times a day before meal)

**அனுபானம் (Adjuvant):-**

தேன் / வெந்நீர் / பால் (Honey/ Warm water/ Milk)

**Reference: - அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம்**

## 05. சிவதைச் சூரணம் (Sivathai Chooranam)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | இலவங்கப்பட்டை | ලවංගපොතු | *Eugenia caryophylls* | 10g |
| 02 | கடுக்காய் | අරළු | *Terminalia chebula* | 10g |
| 03 | நெல்லிக்காய் | වියළි නෙල්ලි | *Emblica officianalis* | 10g |
| 04 | தான்றிக்காய் | බුලු | *Terminalia belerica* | 10g |
| 05 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 10g |
| 06 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 10g |
| 07 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 10g |
| 08 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 10g |
| 09 | சிறுநாகம்பூ | නාමල්රේණු | *Mesua Ferrea* | 10g |
| 10 | கோரைக்கிழங்கு | කලාඳුරු අල | *Cyperus rotundus* | 10g |
| 11 | சிவதைதோல் (சுத்தி) | තිරස්සවාලු | *Ipomea turpenthum* | 40g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

### செயலாற்றும் முறை (Mode of action)

அபான வாயுவை சீர்படுத்தி மலத்தின் நீர்த்தன்மையை அதிகரித்து இலகுவாக மலத்தை வெளியேறச் செய்யும். கேடடைந்த பித்த தோஷத்தை சமநிலைப்படுத்தி இரஞ்சக, பாசக பித்தத்தை மேம்படுத்தும்.

### செய்கை (Action)
இலகுமலகாரி ( laxative), அகட்டுவாயுவகற்றி (Carminative), குளிர்ச்சியுண்டாக்கி (Refrigerant)

### தீரும் நோய்கள் (Indications)

மலக்கட்டு, வெப்பு, வாய்வு

### பிரமாணம் (Dosage)
ரோகநிலைக்கேற்ப 2–5கி இரவு மட்டும் (2 -5g Night only)

### அனுபானம் (Adjuvant)
பனங்கட்டி/ சர்க்கரை / வெந்நீர் (Jaggery /Warm water)

**Reference:- சித்த வைத்திய திரட்டு.**

## 06. தாளிசாதிச் சூரணம் (Thalisathy Chooranam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | தாளிசபத்திரி | තාලිසපත්‍ර | *Abies webbiana* | 200 g |
| 02 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 100 g |
| 03 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 150 g |
| 04 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 200 g |
| 05 | மூங்கிலுப்பு | උණකපුරු | *Bambusa arundinaceae* | 50 g |
| 06 | கூகைநீறு | අරලුප්පිටි | *Maranta arundinaceae* | 200 g |
| 07 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 25 g |
| 08 | கறுவா | කුරුඳුපොතු | *Cinnomomum zeylanicum* | 25g |
| 09 | சீனி | සීනි | Sugar | 1400 g |

**உபயோகம் (Usage)** :- உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
கோளாறடைந்த வாதாதி தோஷத்தை சமநிலைப்படுத்தி, பிராணன் செல்லும் பாதையிலுள்ள கோழையை அகற்றி, அதிகரித்த கபத்தை தணிவடையச் செய்யும்.

**செய்கை (Action)**
இருமல் அடக்கி (Anti tussive), கோழைஇளக்கி (Mucolytic), கோழையகற்றி (Expectorant), தாபிதமகற்றி (Anti inflammatory), மூக்குநீரடக்கி (Anti catarrhal ).

**தீரும் நோய்கள் (Indications)**
இருமல், இளைப்பு, அரோசகம், தடிமன், சுரம், அக்கினிமாந்தம்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1–3கி தினம் இருவேளை / மூன்றுவேளை சாப்பாட்டின் பின்
(1 -3g 2 – 3 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
தேன் /நெய்/வெந்நீர் (Honey/ Ghee /Warm water)

**Reference:- சித்த மருந்து முறையியல்.**

## 07. தாளிசாதிச் சூரணம் -II(Thalisathy Chooranam –II )

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | தாளிசபத்திரி | තාලිසපත්‍ර | *Abies webbiana* | 80g |
| 02 | இலவங்கப்பட்டை | ලවංගපොතු | *Eugenia caryophylls* | 80g |
| 03 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 80g |
| 04 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 80g |
| 05 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 80g |
| 06 | பெருங்காயம் | පෙරුංකායම් | *Ferula asafoetida* | 80g |
| 07 | நெல்லிமுள்ளி | වියළි නෙල්ලි | *Emblica officianalis* | 80g |
| 08 | கோட்டம் | සුවඳකොට්ටම් | *Saussurea lappa* | 80g |
| 09 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 80g |
| 10 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 80g |
| 11 | சதகுப்பை | සතකුප්ප | *Anethum graveolens* | 80g |
| 12 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 80g |
| 13 | கருஞ்சீரகம் | කළුදුරු | *Nigella sativa* | 80g |
| 14 | திப்பலி மூலம் | තිප්පිලි මුල් | *Piper longum* | 80g |
| 15 | கராம்பு | කරාබු නැටි | *Syzygium aromaticum* | 80g |
| 16 | சாதிபத்திரி | සාදිපත්‍ර | *Myristca fragrans* | 80g |
| 17 | கற்கடகசிங்கி | ක්රකටක සුංගි | *Rhus succedanea* | 80g |
| 18 | சாதிக்காய் | සාදික්කා | *Myristica officianalis* | 80g |
| 19 | தான்றிக்காய் | බුලු | *Terminalia belerica* | 80g |
| 20 | கடுக்காய் | අරළු | *Terminalia chebula* | 80g |
| 21 | ஜடாமாஞ்சில் | ජටාමාංශ | *Nardostigmus jatamansi* | 80g |
| 22 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 80g |
| 23 | சிறுநாகம்பூ | නාමල්රේණු | *Mesua ferrea* | 80g |
| 24 | செண்பகமொக்கு | සපුමල් | *Michelia champaca* | 80g |
| 25 | வாய்விடங்கம் | වළඟසාල් | *Embelia ribes* | 80g |
| 26 | இலவங்கப்பத்திரி | ලවංගපත්‍ර | *Eugenia caryophylls* | 80g |
| 27 | கொத்தமல்லி | කොත්තමල්ලි | *Coriandrum sativam* | 480g |
| 28 | சீனி | සීනි | Sugar | 960g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
முத்தோஷ ஏற்றத் தாழ்வினால் ஏற்படும் வாத, பித்த, கபரோகங்களையும் அவற்றின் காரணமாக உடற் தாதுக்களில் ஏற்படும் துன்பங்பளையும் நிவர்த்தி செய்து தேகத்தை ஆரோக்கிய நிலையில் பேணும்.

**செய்கை (Action)**
கோழைஇளக்கி (Mucolytic), கோழையகற்றி (Expectorant), வாதசமனி (Anti Vatha) , பித்தசமனி (Anti Piththa), கபசமனி (Anti kapha).

**தீரும் நோய்கள் (Indications)**
வாத, பித்த, சிலேத்தும ரோகங்கள் அனைத்தும் உடற்சொறி, சிரங்கு, வயிறெரிவு, குன்மம், வயிற்று வலி, வாய்நீர் ஊறல், தாகம், பொருமல், வயிற்றில் கெண்டை, நெஞ்செரிப்பு, ஈரல் வரட்சி, காமாலை, சுரம், அத்திசுரம் வெள்ளை, இருமல், தொண்டைக்கட்டு, சயம், கை கால் குடைச்சல், உஷ்ணம், நீர்க்கட்டு, நீர்எரிச்சல், நீர்க்கடுப்பு, உள்வறட்சி, உள்ளுருக்கி, கை கால் கடுப்பு, சிரவாயு, மயக்கம், மருந்தீடு.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1–2கி தினம் இருவேளை/ மூன்றுவேளை சாப்பாட்டின் பின்
(1 -2g  2 – 3 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
தேன் /நெய் (Honey/ Ghee)

**Reference :- சித்த வைத்தியத் திரட்டு**



**தாளிசபத்திரி (*Abies webbiana*)**

## 08. திரிபலாச் சூரணம் (Thiripala Chooranam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | கடுக்காய் | අරළු | *Terminalia chebula* | 100g |
| 02 | நெல்லிக்காய் | වියළි නෙල්ලි | *Emblica officianalis* | 100g |
| 03 | தான்றிக்காய் | බුළු | *Terminalia belerica* | 100g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம்(Internal Use), வெளிப்பிரயோகம் **(**External Use).

**செயலாற்றும் முறை (Mode Of Action)**

முத்தோஷங்களை சமநிலைப்படுத்தி உடலை நன்நிலையில் பேணும்.

**செய்கை (Action)**

முத்தோசசமனி (Anti tridosha), நுண்ணுயிர்க்கொல்லி (Anti microbial), தாபிதமகற்றி (Anti inflammatory), இலகுமலகாரி (Laxative), துவர்ப்பி (Astringent), நீரிழிவுபோக்கி (Anti diabetic)

**தீரும் நோய்கள் (Indications)**
மலக்கட்டு, வாய்ப்புண், விரணம், நீரிழிவு, உடற்பருமன்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1– 2கி தினம் இருவேளை/ மூன்று வேளை சாப்பாட்டின் பின்
**(**1 -2g 2 – 3 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
பனங்கட்டி / சீனி/ வெந்நீர் / தேன்
**(**Palm Jaggary/Sugar /Warm water/Honey)

**Refrence :- சித்த மருந்து முறையியல்.**

## 09. நிலபாகல் சூரணம் (Nilapakal Chooranam)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | நிலவாகை | නෙලවග - සෙනෙහෙකොළ | *Cassia obtusa* | 10 g |
| 02 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 10 g |
| 03 | சூரத்தாமரை | සෙනෙහෙකොළ | *Cassia senna* | 10 g |
| 04 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 10 g |
| 05 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 10 g |
| 06 | வாய்விடங்கம் | වළඟසාල් | *Embelia Ribes* | 10 g |
| 07 | சீனி | සීනි | Sugar | 50 g |

**உபயோகம் (Usage) : -** உட்பிரயோகம் (Internal use)

### செயலாற்றும் முறை (Mode of action)

அபானவாயுவை சீர்படுத்தி மலத்தின் நீர்த்தன்மையை அதிகரித்து இலகுவாக மலத்தை வெளியேறச் செய்யும். கேடடைந்த பித்ததோஷத்தை சமநிலைப்படுத்தி இரஞ்சக பாசக பித்தத்தை மேம்படுத்தும்.

### செய்கை (Action)

இசிவகற்றி (Anti spasmodic) இலகுமலகாரி ( laxative), அகட்டுவாயுவகற்றி (Carminative), குளிர்ச்சியுண்டாக்கி (Refrigerant)

### தீரும் நோய்கள் (Indications)
மலக்கட்டு, தோல் பிணிகள், உடம்பெரிவு, வாய்வு.

### பிரமாணம் (Dosage)
ரோகநிலைக்கேற்ப 1– 2கி தினம் இருவேளை / மூன்றுவேளை, சாப்பாட்டின் பின்
**(**1 -2g 2-3 times a day after meal)

### அனுபானம் (Adjuvant)
பனங்கட்டி /வெந்நீர் (Palm Jaggary /Warm water)

**Reference :- SIDDHA PHARMACOPIA**

## 10. பஞ்சதீபாக்கினிச் சூரணம் (Panchatheepakkini Chooranam)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 100g |
| 02 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 100g |
| 03 | திற்பலி | තිප්පලි | *Piper longum* | 100g |
| 04 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 100g |
| 05 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 100g |
| 06 | சீனி | සීනි | Sugar | 500g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

### செயலாற்றும் முறை (Mode of action)

உடலில் உள்ள பாசக, சாதக, ஆலோசக, பிராஜக, இரஞ்சக பித்தம் ஆகியவற்றை நன்நிலையில் பேணும். இதனால் உடலில் பித்தத்தின் ஆற்றலைக் கூட்டும். அக்கினி மந்தத்தை தடுப்பதனால் ஆமம் உருவாதலை தடுக்கும்.

### செய்கை (Action)

அகட்டுவாயுவகற்றி ( Carminative), பசித்தீதூண்டி ( Stomachic), செரிப்புண்டாக்கி (Digestive ).

### தீரும் நோய்கள் (Indications)

அதிபித்தம், சூலை, செரியாமை, வயிற்றுப்பொருமல், கிறுகிறுப்பு, வாந்தி, உஸ்ணம், பசியின்மை.

### பிரமாணம் (Dosage)

ரோகநிலைக்கேற்ப 1– 2கி தினம் இரு வேளை / மூன்று வேளை சாப்பாட்டிற்குப் பின்
(1 -2g 2 – 3 times a day after meal)

### அனுபானம் (Adjuvant)

தேன்/ நெய் (Honey / Ghee)

**Reference:- சித்த வைத்திய திரட்டு.**

## 11. பாஸ்கரலவணச் சூரணம் (Baskara Lavana Chooranam)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | கறியுப்பு | ලුණු | *Sodium Chloride* | 250 g |
| 02 | கல்லுப்பு | ලුණු ස්පටික | *Sodium Chloride – Himalayal Salt (not Pink)* | 150 g |
| 03 | கறுத்தஉப்பு | කළු ලුණු | *Sodium Chloride with Sulfur-Blacksolt* | 60 g |
| 04 | இந்துப்பு | සහිඳලුණු | *Sodium Chloride Rock Salt - Sodium Chloride (Himalayal Pink Salt)* | 60 g |
| 05 | மல்லி | කොත්තමල්ලි | *Coriandrum sativam* | 60 g |
| 06 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 60 g |
| 07 | திற்பலிமூலம் | තිප්පිලිමුල් | *Piper longum* | 60 g |
| 08 | கருஞ்சீரகம் | කළුදුරු | *Nigella sativa* | 60 g |
| 09 | இலவங்கப்பத்திரி | ලවංගපත්‍ර | *Eugenia caryophylls* | 60 g |
| 10 | சிறுநாகம்பூ | නාමල්රේණු | *Mesua ferrea* | 60 g |
| 11 | தாளிசபத்திரி | තාලිසපත්‍ර | *Abies webbiana* | 60 g |
| 12 | கொறுக்காய்புளி | ගොරකා | *Garcinia indica* | 60 g |
| 13 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 30 g |
| 14 | நற்சீரகம் | සුදුරු | *Cuminum cyminum* | 30 g |
| 15 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 30 g |
| 16 | இலவங்கப்பட்டை | ලවංගපොතු | *Eugenia caryophylls* | 15 g |
| 17 | ஏலக்காய் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 15 g |
| 18 | மாதுளைஓடு | දෙළුම්පොතු | *Punica granatum* | 120 g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

### செயலாற்றும் முறை (Mode of action)
கோளாறடைந்த ஜாடராக்கினியையும், பாசகபித்தத்தையும் சீர்செய்யும். கேடடைந்த அபானவாயுவின் கீழ்முக செல்லுகையை மேம்படுத்தும்.

### செய்கை (Action)
அம்லநாசினி (Antacid), அகட்டுவாயுவகற்றி ( Carminative), பசித்தீதூண்டி ( Stomachic) , செரிப்புண்டாக்கி (Digestive ).

### தீரும் நோய்கள் (Indications)
பித்தவாய்வு, அஜீரணம், பரிநாம சூலை, வயிற்றுப்பிசம், குன்மம், வயிற்றுப்பொருமல்

**பிரமாணம் (Dosage)**

ரோகநிலைக்கேற்ப 1/2–1கி தினம் இரு வேளை / மூன்று வேளை சாப்பாட்டிற்கு ½ மணிமுன் (1/2–1g, 2 – 3 times a day ½ an hour before meals

**அனுபானம் (Adjuvant)**
மோர்/வெந்நீர் (Buttermilk/ warm water)

**Reference:- கண்ணுச்சாமிப்பிள்ளை பரம்பரை வைத்தியம்**

47




***திற்பலி (Piper longum)***

## 12. மல்லிச் சூரணம் (Malli Chooranam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 360 g |
| 02 | கருஞ்சீரகம் | කළුදුරු | *Nigella sativa* | 360 g |
| 03 | கராம்பு | කරාබුනැටි | *Syzygium aromaticum* | 360 g |
| 04 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 360 g |
| 05 | கறுவாப்பட்டை | කුරුඳුපොතු | *Cinnomomum zeylanicum* | 360 g |
| 06 | கொத்தமல்லி | කොත්තමල්ලි | *Coriandrum sativam* | 600 g |
| 07 | வினாகிரி | විනාකිරි | *Viniger* | 750 ml |
| 08 | சீனி | සීනි | Sugar | 360 g |

**உபயோகம்** (**Usage) :-** உட்பிரயோகம் **(**Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**

பாசக, இரஞ்சக, ஆலோசக பித்தங்களை சீர்செய்யும், ஏழு உடற்கட்டுக்களுக்கும் இரசதாதுவிலிருந்து போசணையை பெறும் அளவைக் கூட்டும். இரத்த ஓட்டத்தை சீர்படுத்தும்.

**செய்கை (Action)**
வெப்பகற்றி (Febrifuge) அகட்டுவாயுவகற்றி (Carminative), குளிர்ச்சியுண்டாக்கி (Refrigerant), உறக்கமுண்டாக்கி (Hypnotic).

**தீரும் நோய்கள் (Indications)**
சுரம், வாய்வு, நித்திரையின்மை, தலையிடி, இடுப்பு நெஞ்சு பலமடையும் , கரப்பான்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1–3கி தினம் இருவேளை/மூன்றுவேளை சாப்பாட்டின் பின்
**(**1-3g , 2-3 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
தேன்/வெந்நீர் (Honey /Warm water)

**Reference : - சுதேச வைத்திய ஔடத திரட்டு**

## 13. மதுமேகச் சூரணம் (Mathumega Chooranam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | கடுக்காய் | අරළු | *Terminalia chebula* | 50 g |
| 02 | நெல்லிக்காய் | වියළි නෙල්ලි | *Emblica officianalis* | 50 g |
| 03 | கறிவேப்பிலை | කරපිංචා | *Murraya koenigii* | 50 g |
| 04 | சிறுகுறிஞ்சா | මස්බැද්ද | *Gymnema lactiferum* | 25 g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
துவர்ப்பு செய்கை மூலம் மூத்திர நாளங்களில், இரத்தக் குழாய்களில் இனிப்பு சுவையின் தன்மையை குறைத்து கலங்களின் அகத்துறிஞ்சலைக் கூட்டி அதன் தொழிற்பாட்டைக் கூட்டும். சிறுநீர்பெருகியோடும் தன்மையை குறைக்கும்.

**செய்கை (Action)**
நீரிழிவுபோக்கி (Anti Diabetics )

**தீரும் நோய்கள் (Indications)**
மதுமேகம், உடலுக்கு வன்மையூட்டும்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1–4கி தினம் இருவேளை / மூன்றுவேளை சாப்பாட்டிற்கு முன்
(1-4g 2 – 3 times a day before meals)

**அனுபானம் (Adjuvant)**
வெந்நீர் (Warm water).

**Reference :- சித்த மருந்து முறையியல்.**

## 14. மாதுளையோட்டுச் சூரணம் (Mathulai Ooddu Chooranam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | மூங்கிலுப்பு | උණකපුරු | *Manna of bamboo* | 25g |
| 02 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 100g |
| 03 | கறுவா | කුරුඳුපොතු | *Cinnomomum zeylanicum* | 100g |
| 04 | இலவங்கப்பத்திரி | ලවංගපත්‍ර | *Eugenia caryophylls* | 100g |
| 05 | சிறுநாகம்பூ | නාමල්රේණු | *Mesua ferrea* | 100g |
| 06 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 200g |
| 07 | கொத்தமல்லி | කොත්තමල්ලි | *Coriandrum sativam* | 200g |
| 08 | சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 200g |
| 09 | திற்பலிமூலம் | තිප්පිලිමුල් | *Piper longum* | 200g |
| 10 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 200g |
| 11 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 200g |
| 12 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 200g |
| 13 | மாதுளை ஓடு | දෙළුම්පොතු | *Punica granatum* | 1600g |
| 14 | சீனி | සීනි | Sugar | 1600g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் **(**Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
துவர்ப்பி செய்கை மூலம் இரப்பை புண்ணை கட்டுப்படுத்தும். பெருகி ஓடும் நிலமைகளில் நல்ல பலனைத் தரும்.

**செய்கை (Action)**

கழிச்சலகற்றி **(**Anti diarrheal )

**தீரும் நோய்கள் (Indications)**
வயிற்றோட்டம், கழிச்சல், வயிற்றுப்பொருமல்

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1−2கி தினம் இருவேளை/ மூன்றுவேளை சாப்பாட்டிற்கு பின்
**(**1 -2g 2-3 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
தேன்/ நெய் **(**Honey / Ghee)

**Reference : - சித்த மருந்து முறையியல்.**

# 15. முடக்குச் சூரணம் (Mudakku Chooranam)

## சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 20 g |
| 02 | அமுக்கரா (சுத்தி) | අමුක්කරා | *Withania somnifera* | 20 g |
| 03 | நிலப்பனங்கிழங்கு | බිංතල් අල | *Curculigo orchioides* | 20 g |
| 04 | கோரைக்கிழங்கு | කලාඳුරු අල | *Cyperus rotundus* | 20 g |
| 05 | நீரடிமுத்து | ඔකුල ඇට | *Hydrocarpus laurifolia* | 20 g |
| 06 | சிற்றரத்தை | හීන්අරත්ත | *Alpinia chinensis* | 20 g |
| 07 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 20 g |
| 08 | தான்றிக்காய் | බුලු | *Terminalia belerica* | 05 g |
| 09 | நெல்லிக்காய் | වියළි නෙල්ලි | *Emblica officianalis* | 05 g |
| 10 | மாயாக்காய் | මාසක්කා | *Quercus infectoria* | 05 g |
| 11 | சாதிக்காய் | සාදික්කා | *Myristica officianalis* | 05 g |
| 12 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 05 g |
| 13 | கராம்பு | කරාබුනැටි | *Syzygium aromaticum* | 05 g |
| 14 | திற்பலி மூலம் | තිප්පිලිමුල් | *Piper longum* | 05 g |
| 15 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 05 g |
| 16 | கொத்தமல்லி | කොත්තමල්ලි | *Coriandrum sativam* | 05 g |
| 17 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 05 g |
| 18 | வெண்கோட்டம் | සුවඳකොට්ටම් | *Saussurea lappa* | 05 g |
| 19 | கார்போகரசி | බාකුචි | *Psoralia corylifolia* | 05 g |
| 20 | கருஞ்சீரகம் | කළුදුරු | *Nigella sativa* | 05 g |
| 21 | பறங்கிக்கிழங்கு | චීන අල | *Smilax chinensis* | 205 g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**

மேலெழுந்த அபான, உதான, வியானவாயுக்களை சீர்படுத்தும். வாத அதிகரிப்பால் கோளாறடைந்த மூட்டுக்களில் ஏற்பட்ட பிறழ்வை சீர்படுத்தும்.

**செய்கை (Action)**

தாபிதமகற்றி (Anti inflammatory) , வேதனாசாந்தினி ( Analgesic ), நரம்புரமாக்கி (Nervine tonic), வாதசமனி (Anti vatha).

**தீரும் நோய்கள் (Indications)**
வாதரோகங்கள், குன்மம், மேகவியாதிகள், கை கால் முடக்கம்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப ½ -1கி தினம் இருவேளை/மூன்றுவேளை சாப்பாட்டின் பின்
(½ -1g, 2 – 3 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
தேன் (Honey).

**Reference :- சித்த ஔடத செய்முறை**





அமுக்கரா ***(Withania somnifera)***

# 16. நீரிழிவுச் சூரணம் (Neerizhivu Chooranam)

## சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | கடுக்காய்த் தோல் | අරළු | *Terminalia chebula* | 100g |
| 02 | நெல்லிவற்றல் | වියළි නෙල්ලි | *Emblica officianalis* | 100g |
| 03 | கறிவேப்பிலை | කරපිංචා | *Murraya koenigii* | 100g |
| 04 | நாவற்கொட்டை | මාදං ඇට | *Syzygium cumini* | 50g |
| 05 | சீந்தில் | රසකිඳ | *Tinospora cordifolia* | 50g |
| 06 | கீழ்க்காய் நெல்லி | එලපිටවක්කා | *Phylanthus amarus* | 50g |
| 07 | கோரைக்கிழங்கு | කලාඳුරු අල | *Cyperus rotundus* | 50g |

**உபயோகம் (Usage) :**- உட்பிரயோகம் **(**Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action )**

துவர்ப்பு செய்கை மூலம் மூத்திர நாளங்களில், இரத்தக் குழாய்களில் இனிப்பு சுவையின் தன்மையை குறைத்து கலங்களின் அகத்துறிஞ்சலைக் கூட்டி அதன் தொழிற்பாட்டைக் கூட்டும். சிறுநீர் பெருகியோடும் தன்மையை குறைக்கும்.

**செய்கை (Action)**
நீரிழிவுபோக்கி **(**Anti Diabetics ) , துவர்ப்பி ( Astringent).

**தீரும் நோய்கள் (Indications)**
மதுமேகம், அதிதாகம், அதிமூத்திரம்

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1–2கி தினம் இருவேளை / மூன்று வேளை சாப்பாட்டிற்கு முன்
(1 -2g , 2-3 times a day before meal)

**அனுபானம் (Adjuvant)**
வெந்நீர் (Worm water)

**Reference:- IMCOPS**

## 17. வெண்தாமரையாதிச் சூரணம் (Vendamarayathi Chooranam)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | ஏலரிசி | අරළු | *Elettaria cardamomum* | 100g |
| 02 | சுக்கு | වියළි නෙල්ලි | *Zingeber officianale* | 200g |
| 03 | திப்பலி | කරපිංචා | *Piper longum* | 300g |
| 04 | அதிமதுரம் | මාදං ඇට | *Glycyrrhiza glabra* | 400g |
| 05 | சதகுப்பை | රසකිඳ | *Anethum graveolens* | 500g |
| 06 | சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 600g |
| 07 | வெண்தாமரைப் பூ இதழ் | නෙළුම් මල්පෙති | *Nelumbo nucifera* | 1200g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
தமரகம், இரத்தக் குழாய்களுக்கு உரத்தைத்தந்து தமரக வாயுவை சீர்படுத்தும்.

**செய்கை (Action)**
குருதியழல் நோய்போக்கி (**A**nti hypertensive), இருதய உரமாக்கி (Cardiac tonic).

**தீரும் நோய்கள் (Indications)**
இரத்தபித்தம், வாதபித்தம் (Hypertension).

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1–2கி தினம் இருவேளை/மூன்றுவேளை, சாப்பாட்டிற்கு பின்
**(**1 -2g, 2-3 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
பால்/குங்கிலியபற்பம் (Milk/ Kungiliapatpam)

**Reference :- IMCOPS**

## 18. அசைச் சூரணம் (Asai Chooranam)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 1 kg |
| 02 | தேசிக்காய் | දෙහි | *Citrus aurantifolia* | 300Nos |

**உபயோகம் (Usage)** உட்பிரயோகம் **:- (**Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
அதிகரித்த பித்ததோஷத்தை சமநிலைப்படுத்தும்., வாத, பித்த அதிகரிப்பை நிவர்த்தி செய்யும்

**செய்கை (Action)**
குருதியழல் நோய்போக்கி (Anti hypertensive), வாதசமனி, (Anti vatha, பித்தசமனி (Anti piththa)

**தீரும் நோய்கள் (Indications)**
பித்தநோய்கள், தலைக்கிறுகிறுப்பு, வாந்தி, அக்கினிமாந்தம், உஷ்ணம், காங்கை, வாதபித்தரோகங்கள்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1–2கி தினம் இருவேளை/மூன்றுவேளை சாப்பாட்டிற்கு பின் **(**1 -2g 2 – 3 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
வெந்நீர் (Warm Water**)**

**Reference :- சித்த மருந்து முறையியல்**

# 19. வல்லாரைச் சூரணம் (Vallarai Chooranam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | வல்லாரை | ගොටුකොළ | *Centella asiatica* | 2 kg |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode Of Action)**
காயகல்பமாகத் தொழிற்பட்டு மூளை நரம்புகட்கு புத்துணர்ச்சி அளித்து ஞாபகசக்தியை அதிகரிப்பதுடன் உடலை வனப்புடன் பேணும்.

**செய்கை (Action)**
நரம்புரமாக்கி (Nervion tonic), உடல்தேற்றி (Alterative), உடலுரமாக்கி (Tonic), வெப்பமுண்டாக்கி (Stimulent)

**தீரும் நோய்கள் (Indications)**
ஞாபகமறதி, பதட்டம், பாண்டு, சோகை, உடல் பலவீனம் என்பன நீங்குவதுடன், உடல் வனப்பு, ஒளி கூடி குரல் இனிமையாகும்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1–2 கி தினம் இருவேளை/மூன்றுவேளை சாப்பாட்டிற்கு பின்
**(**1-2g 2 – 3 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
பால் / தேன் / பனங்கட்டி/ நெய்
(Milk/ Honey/ Palm jiggery / Ghee)

**Reference :- குணபாடம் - முதல் பாகம்**

## 20. ஆமணக்கம் வேர்க் குடிநீர் (Aamanakkam Ver Kudineer)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | கண்டங்கத்தரி | කටුවැල්බටු | *Solanum xanthocarpum* | 10g |
| 02 | வட்டுக்கத்தரி | එළබටු | *Solanum surattense* | 10g |
| 03 | ஆமணக்கம்வேர் | එරඬුමුල් | *Ricinus communis* | 10g |
| 04 | நெருஞ்சில் | නෙරෙංචි | *Tribulus terrestris* | 10g |
| 05 | வில்வம்வேர் | බෙලිමුල් | *Aegle marmelos* | 10g |
| 06 | தேங்காய்ப்பூக் கீரை | පොල්පලා | *Aervalanata* | 10g |
| 07 | நாரத்தம்வேர் | නාරං මුල් | *citrus aurantium* | 10g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**

மேலெழுந்தவாதம், கபம் என்பவற்றை சமநிலைப்படுத்தும்.

**செய்கை (Action)**

தாபிதமகற்றி (Anti inflammatory), வேதனாசாந்தினி (Analgesic) வாதசமனி ( Anti vatha)

**தீரும் நோய்கள் (Indications)**

தண்டகவாதம், வாதநோய்கள்

**பிரமாணம் (Dosage)**

ரோகநிலைக்கேற்ப 30-60 மி.லீ தினம் இருவேளை/மூன்றுவேளை சாப்பாட்டிற்கு முன்
(30-60ml, 2-3 times a day before meal)

**Reference:- சித்த மருந்து முறையியல்.**

## 21. பறங்கிப்பட்டைக் குடிநீர் (Parankippaddai Kudineer)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | பறங்கிப்பட்டை | චීනපොතු | *Similax chinensis* | 10g |
| 02 | கடுகுரோகினி | කටුකරෝසන | *Picrorrhi zakurrooa* | 10g |
| 03 | மஞ்சிஷ்டி | වැල්මදට | *Rubia cordifolia* | 10g |
| 04 | மரமஞ்சள் | වෙනිවැල්ගැට | Coscinimum fenestratum | 10g |
| 05 | கடுக்காய் | අරළු | *Terminalia chebula* | 10g |
| 06 | தான்றிக்காய் | බුලු | *Terminalia bellarica* | 10g |
| 07 | வசம்பு | වදකහ | *Acorus calamus* | 10g |
| 08 | சோம்பு | මහදුරු | *Foeniculum vulgare* | 10g |
| 09 | வேப்பம்பட்டை | කොහොඹපොතු | *Azadiracta indica* | 10g |
| 10 | சீந்தில் | රසකිඳ | *Tinospora cordifolia* | 10g |

**உபயோகம் (Usage) : -** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
பித்த அதிகரிப்பைத் தவிர்ப்பதனால் வாதத்தை சமநிலைப்படுத்தும். இதனால் கல்லீரல், மண்ணீரல் என்பவற்றின் தொழிற்பாட்டைக் கூட்டும். இரத்தத்தைச் சுத்திகரிக்கும்.

**செய்கை (Action)**

அழுகலகற்றி (Anti septic), நுண்ணுயிர்க்கொல்லி (Anti microbial), குருதித்தூய்மையாக்கி (Blood Purificant), தாபிதமகற்றி (Anti inflammation).

**தீரும் நோய்கள் (Indications)**
பூச்சிக் கடி, குட்டம், படை, சொறி, வீக்கம், மூட்டுவலி

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 30-60 மி.லீ தினம் இருவேளை/மூன்றுவேளை சாப்பாட்டிற்கு முன்
**(**30 - 60ml, 2 – 3 times a day before meal)

**Reference:- Pharmacopoeia of Hospital of Indian Medicine**

## 22. பட்டோலாதி குடிநீர் (Paddolathi Kudineer)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | கடுக்காய் | අරළු | *Terminalia chebula* | 10g |
| 02 | நெல்லிக்காய் | වියළි නෙල්ලි | *Emblica officianalis* | 10g |
| 03 | தான்றிக்காய் | බුලු | *Terminalia belerica* | 10g |
| 04 | சீந்தில் | රසකිඳ | *Tinospora cordifolia* | 10g |
| 05 | பேய்ப்புடோல் | දුම්මැල්ල | *Trichosanthes diocia* | 10g |
| 06 | கடுகுரோகிணி | කටුකරෝසන | *Picrorrhiza kurrooa* | 10g |
| 07 | சாத்தாவாரி | හාතවාරිය අල | *Asparagus racemosus* | 10g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் **(**Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**

வாதம், பித்தம், கபம் ஆகியன கேடடைந்து தோல், குருதி ஆகியவற்றில் வெளிக்காட்டப்படும் இலட்சணங்களை குறைக்கும். உடலைக் குளிர்சியாக்கும்.

**செய்கை (Action)**

நுண்ணுயிர்க்கொல்லி (Anti microbial), ஒவ்வாமைநீக்கி (Anti allergic) , குருதித்தூய்மையாக்கி (Blood purificant)

**தீரும் நோய்கள் (Indications)**

சிரங்கு, கடி, சொறி,புண், சீழ்வடியும் கரப்பான், இதனால் ஏற்படும் சுரம் என்பவற்றைத் தணிக்கும்.

**பிரமாணம் (Dosage)**

ரோகநிலைக்கேற்ப 30-60 மி.லீ தினம் இரு / மூன்று வேளை சாப்பாட்டிற்கு முன்
(30 - 60ml, 2 – 3 times a day before meal)

**Reference:- ஆயுர்வேத ஔடத சங்கிரதம்**

## 23. புணர்ணவாஸ்டக குடிநீர் (Punarnavastaka Kudineer)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | பேய்ப்புடோல் | දුම්මැල්ල | *Trichosanthes diocia* | 10g |
| 02 | கடுகுரோகிணி | කටුකරෝසන | *Picrorrhizakurrooa* | 10g |
| 03 | சாரணை | සාරණ | *Trianthemadecandra* | 10g |
| 04 | வேப்பம் பட்டை | කොහොඹපොතු | *Azadiracta indica* | 10g |
| 05 | சீந்தில் | රසකිඳ | *Tinospora cordifolia* | 10g |
| 06 | மரமஞ்சள் | වෙනිවැල්ගැට | *Coscinimumfenestratum* | 10g |
| 07 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeberofficianale* | 10g |
| 08 | கடுக்காய் | අරළු | *Terminalia chebula* | 10g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
வாத பித்த தோஷ அதிகரிப்பால் கேடடைந்த கபதோஷத்தை குறைத்து உடல் வீக்கம், சோபை ஆகியவற்றையும் குறைத்து ஈரல் மண்ணீரல் ஆகியற்றை நன்னிலையில் பேணும்.

**செய்கை (Action)**
சிறுநீர்ப்பெருக்கி (Diuretic ),தாபிதமகற்றி (Anti inflammatory), நஞ்சகற்றி (Detoxificant), ஈரல்உரமாக்கி (Liver tonic), வீக்கம் கரைச்சி (Resolvent).

**தீரும் நோய்கள் (Indications)**
உடல் வீக்கம், காமாலை, மண்ணீரல் வீக்கம், பெருவயிறு, சோபை, மூத்திரநாளஅழற்சி.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 30-60 மி.லீ தினம் இரு / மூன்று வேளை சாப்பாட்டிற்கு முன்
(30 - 60ml, 2 – 3 times a day before meal)

**Reference:- ஆயுர்வேத ஔடத சங்கிரதம்**

# 24 .ராசனாசப்தக குடிநீர் (Raasana Sapthaka Kudineer)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | சிற்றரத்தை | හීන්අරත්ත | *Alpinia officinalis* | 10g |
| 02 | சீந்தில் | රසකිඳ | *Tinospora cordifolia* | 10g |
| 03 | சரக்கொன்றைப் பட்டை | ඇහැළපොතු | *Cassia fistula* | 10g |
| 04 | சாரணை | සාරණ | *Trianthemadecandra* | 10g |
| 05 | ஆமணக்கம் வேர் | එරඬුමුල් | *Ricinus communis* | 10g |
| 06 | தேவதாரு | දේවදාර | *Cedrus deodara* | 10g |
| 07 | நெருஞ்சில் | නෙරෙංචි | *Tribulus terrestris* | 10g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
வாதகபதோஷங்களை தன்னிலைப்படுத்தும் பிரகோபித்த பித்ததோஷத்தை தணிவடையச் செய்து சுரத்தைப் போக்கும்

**செய்கை (Action)**
நுண்ணுயிர்க் கொல்லி (Anti microbial) , வாதசமனி, (Anti vatha), பித்தசமனி (Anti piththa), பித்தசமனி ( Anti kapha)

**தீரும் நோய்கள் (Indications)**
வாதம், மூட்டுக்களில் ஏற்படும் வலியையும் அதனால் உண்டாகும் சுரம், ஆமவாத இருதயநோய்கள், சூலை நோய், ஆம சூலை.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 30-60மி.லீ தினம் இரு/மூன்றுவேளை சாப்பாட்டிற்கு முன்
(30 - 60ml, 2 – 3 times a day before meal)

**Reference:- ஆயுர்வேத ஔடத சங்கிரதம்.**

## 25. திரிகடுகாதிக் குடிநீர் (Thirikadukathi Kudineer)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeberofficianale* | 10g |
| 02 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 10g |
| 03 | திப்பலி | තිප්පිලි | *Piper longum* | 10g |
| 04 | கடுக்காய்த்தோல் | අරළු | *Terminalia chebula* | 10g |
| 05 | நெல்லிவற்றல் | වියළි නෙල්ලි | *Phyllanthus emblica* | 10g |
| 06 | தான்றிக்காய்தோல் | බුලු | *Terminalia bellarica* | 10g |
| 07 | கோரைக்கிழங்கு | කලාඳුරු අල | *Cyperus rotandus* | 10g |
| 08 | கொத்தமல்லி | කොත්තමල්ලි | *Coriandrum sativum* | 10g |
| 09 | வசம்பு | වදකහ | *Acorus calamus* | 10g |
| 10 | நிலவேம்பு | බිංකොහොඹ | *Andrographis paniculata* | 10g |
| 11 | கடுகுரோகினி | කටුකරෝසන | *Picrorrhizakurrooa* | 10g |
| 12 | சீந்தில் | රසකිඳ | *Tinospora cordifolia* | 10g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
ஜாடராக்கினியையும், பாசகபித்தத்தையும் அதிகரிப்பதுடன் வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றையும் சமநிலையில் பேணும்.

**செய்கை (Action)**
இசிவகற்றி (Anti spasmodic), செரிப்புண்டாக்கி ( Digestive) , வாதசமனி ( Anti vatha), கபசமனி ( Anti kapha)

**தீரும்நோய்கள் (Indications)**
அக்கினிமாந்தியம், அஜீரணம், வாய்வுக் குத்து, ஏப்பம், பசியின்மை, கை கால் குத்து, சுவாசம், தெண்டல்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 30-60மி.லீ தினம் இரு / மூன்று வேளை சாப்பாட்டிற்கு முன்
(30 - 60ml, 2 – 3 times a day before meal)

**Reference:- ஆயுர்வேத ஔடத சங்கிரதம்**

# 26. ஆடாதோடைக் குடிநீர் (Adathodai Kudineer)

## சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 4 பங்கு |
| 02 | தாளிசபத்திரி | තාලිසපත් | *Abies webbiana* | 4 பங்கு |
| 03 | திற்பலி | තිප්පිලි | *Piper longam* | 4 பங்கு |
| 04 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 1 பங்கு |
| 05 | ஆடாதோடை இலை | ආඩතෝඩාකොළ | *Adathodavasicca* | 1 பங்கு |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
கேடடைந்தசமானவாயு, பிராணவாயு ஆகியவற்றை சீர்செய்து, பிராணவாயுவின் தடையால் ஏற்படும் ஆமத்தை அகற்றி, ஆம அதிகரிப்பால் ஏற்பட்ட தாதுஷீணத்தை நீக்கி ஜாடராக்கினியை அதிகப்படுத்தி கபதோஷத்தை தணிவடையச்செய்யும்.

**செய்கை (Action)**
இருமல்அடக்கி (Anti tussive), கோழைஇளக்கி (Mucolytic), கோழையகற்றி (Expectorant) தாபிதமகற்றி (Anti inflammatory), மூக்குநீரடக்கி (Anti catarrhal ).

**தீரும் நோய்கள் (Indications)**
இருமல், பசியின்மை, நாட்பட்ட இருமல், இரைப்பிருமல், கபசுரம்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 30-60 மி.லீ தினம் இரு/மூன்றுவேளை சாப்பாட்டிற்கு முன் (30 - 60ml, 2 – 3 times a day before meal)

**அனுபானம் (Adjuvant)**
சர்க்கரை (Palm Jaggary).

**Reference:- வட மாகாண சுதேச மருந்து உற்பத்தி பிரிவு முறை**

## 27. நிலவேம்புக் குடிநீர் (Nilavembu Kudineer)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | நிலவேம்பு | බිංකොහොඹ | *Andrographis paniculata* | 10g |
| 02 | வெட்டிவேர் | වෙට්ටිවේර් | *Vettiverazeylanica* | 10g |
| 03 | இலாமிச்சைவேர் | සැවැන්දරා | *Plectranthsvettiveroides* | 10g |
| 04 | சந்தணக்கட்டை | සුදුහඳුන් | *Santalum alba* | 10g |
| 05 | பேய்புடோல் | දුම්මැල්ල | *Trichosanthes diocia* | 10g |
| 06 | கோரைக்கிழங்கு | කලාඳුරු අල | *Cyperus rotandus* | 10g |
| 07 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeberofficianale* | 10g |
| 08 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 10g |
| 09 | பற்படாகம் | පත්පාඩගම් | *OldenlandiaCorymbosa* | 10g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
ஆம அதிகரிப்பால் ஏற்பட்ட வாதபித்த அதிகரிப்பை தணிவடையச் செய்வதன் மூலம் வாத, பித்த, கப, சுரங்களைப் போக்கும்.

**செய்கை (Action)**
வெப்பம்அடக்கி (Anti pyretic), தாபிதமகற்றி (Anti inflammatory), நுண்ணயிர்க்கொல்லி (Anti microbial) .

**தீரும் நோய்கள் (Indications)**
குளிர் சுரம், பித்தசுரம், நடுங்கல் சுரம், டெங்குகாய்ச்சல்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 30-60மி.லீ தினம் இரு/மூன்று வேளை சாப்பாட்டிற்கு முன்
(30 - 60ml, 2 – 3 times a day before meal)

**Reference:- சித்த வைத்திய திரட்டு**

# 28. நாக்குப்பூச்சிக் குடிநீர் (Naakkuppoochchi Kudineer)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | பலாசம்வித்து | කේළඇට | *Butea monosperma* | 10g |
| 02 | கருஞ்சீரகம் | කළුදුරු | *Nigella sativa* | 10g |
| 03 | வாய்விடங்கம் | වළඟසාල් | *Embelia ribes* | 10g |
| 04 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 10g |
| 05 | சிவதைவேர் | තිරස්සවාලු | *Ipomea turpenthum* | 10g |
| 06 | நிலவாகை (நிலாவாரை) | නෙලවග | *Cassia obtusa* | 10g |
| 07 | பெருஞ்சீரகம் | මහදුරු | *Cocinium fenestratum* | 10g |
| 08 | கடுகுரோகணி | කටුකරෝසන | *Picrorrhiza kurrooa* | 05g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
குடலில் உள்ளபுழுக்களை அழித்து உடலை நன்னிலையில் பேணும். பசித்தீயைக் தூண்டி உணவில் விருப்பத்தை ஏற்படுத்தும். இலகுவாகமலம் கழியச் செய்யும்.

**செய்கை (Action)**
புழுக்கொல்லி **(**Vermifuge)

**தீரும் நோய்கள் (Indications)**
குடற் புழுக்கள்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 30-60 மி.லீ தினம் இரு/மூன்று வேளை சாப்பாட்டிற்கு முன்
(30 - 60ml, 2 – 3 times a day before meal)

**Reference : - சித்த வைத்திய திரட்டு**

## 29. சிரவில்வாதிக் குடிநீர் (Chirabilvathy Kudineer)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeberofficianale* | 10g |
| 02 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 10g |
| 03 | கடுக்காய் | අරළු | *Terminalia chebula* | 10g |
| 04 | புங்கம்பட்டை | කරඳ පොතු | *Pongamia pinnata* | 10g |
| 05 | சாறணை | සාරණ | *Trianthemadecandra* | 10g |
| 06 | இந்துப்பு | සහිඳලුණු | *Sodium Chloride Impura* | 10g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
அக்கினி மாந்தத்தால் ஏற்பட்ட கப அதிகரிப்பை குறைத்து, அதனுடன் தொடர்புடையதான வாதம் கீழ்நோக்கிச் செல்லும் தன்மையைக் கூட்டும்.

**செய்கை (Action)**
இலகுமலகாரி (laxative) , அமிலநாசினி (Antacid)

**தீரும் நோய்கள்(Indications)**
வாதம், கபம் அதிகரித்த நிலைமை, குதவெடிப்பு, பௌந்திரம், குன்மம், வயிற்றுப்பொருமல், அஜீரணத்துடன் கூடிய அக்கினி மந்தம்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 30-60 மி.லீ தினம் இரு / மூன்று வேளை சாப்பாட்டிற்கு முன்
(30 - 60ml, 2 – 3 times a day before meal)

**Reference:- ஆயுர்வேத ஔடத சங்கிரதம்**

## 30. புஸ்கர மூலாதிக்குடிநீர் (Puskaramoolathy Kudineer)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | ஜடாமாஞ்சில் | ජටාමාංශ | *Nardostigmusjatamansi* | 10g |
| 02 | ஆடாதோடைவேர் | ආඩතෝඩාමුල් | *Adathoda vasicca* | 10g |
| 03 | பூலான்கிழங்கு | හරන්කහ | *Curcuma zedoaria* | 10g |
| 04 | செந்நாயுருவி | කරල්සැබෝ | *Achyranthus aspera* | 10g |
| 05 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 10g |
| 06 | கண்டங்கத்தரி | කටුවැල්බටු | *Solanum xanthocaupum* | 10g |
| 07 | சிறுதேக்கு | සිරිතේක්කු | *Clerodendron serratum* | 10g |
| 08 | வெண்கோட்டம் | සුවඳකොට්ටම් | *Saussurea lappa* | 10g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**

அதிகரித்த கபதோஷத்தை சமநிலைப்படுத்துவதுடன் வாதபித்த தோஷங்களை அதிகரிக்காது தடுக்கும். இரத்த நரம்பை தளர்வடையச் செய்வதனால் இரத்தபித்தம் அதிகரிக்காது பாதுகாக்கும் கபதோஷம் சுவாசப் பாதையில் அதிகரித்து கோழை ஆக்குவதைக் குறைக்கும்.

**செய்கை (Action)**

இசிவகற்றி (Anti spasmodic), குருதியழல் நோய்போக்கி (**A**nti hypertensive) , கோழையகற்றி (Expectorant).

**தீரும் நோய்கள் (Indications)**

உயர் குருதி அழுத்தம், இரைப்பு, காசம், மந்தாரகாசம்.

**பிரமாணம் (Dosage)**

ரோகநிலைக்கேற்ப 30-60 மி.லீ தினம் இரு/மூன்றுவேளை சாப்பாட்டிற்கு முன்
(30- 60ml, 2 – 3 times a day before meal)

**Reference:-** பரம்பரைஏட்டுமுறை

## 31. ஆவிரைக்குடிநீர் (Aavirai Kudineer)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | ஆவிரைபஞ்சாங்கம் | රණවරා | *Casia auriculata* | 10g |
| 02 | சரக்கொன்றைப் பட்டை | ඇහැළපොතු | *Cassia fistula* | 10g |
| 03 | நாவல்ப்பட்டை | මාදං පොතු | *Syzygium cumini* | 10g |
| 04 | கடல் அழிஞ்சில் | වල්වරකා | *Casearia esculenta* | 10g |
| 05 | கோரைக்கிழங்கு | කලාඳුරු අල | *Cyperus rotandus* | 10g |
| 06 | வெண்கோட்டம் | සුවඳකොට්ටම් | *Saussurea lappa* | 10g |
| 07 | மருதம் பட்டை | කුඹුක් පොතු | *Terminalia arjuna* | 10g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
பித்தவாத ஆதிக்கத்தால் ஏற்பட்ட மேகரோகமானது தன்னிலையில் அதிகரித்த, தோஷக் கோளாறுகளால் மதுமேகமாக பரிநாமிக்கும் போது ஏற்படும் குறிகுணங்களையும், நோயையும் தீர்க்கும்.

**செய்கை (Action)**
நீரிழிவுபோக்கி (Anti Diabetics ) , துவர்ப்பி ( Astringent),

**தீரும் நோய்களை (Indications)**
மதுமேகம், அதிதாகம், அதிமூத்திரம்

**பிரமாணம் (Dosage)**
நோய்நிலைக்கேற்ப 30-60ml தினம் இரு / மூன்று வேளை சாப்பாட்டிற்கு முன்
(30- 60ml, 2 – 3 times a day before meal)

**Reference :- குணபாடம் மூலிகையியல்**

## 32. பிரப்பங்கிழங்காதிக் குடிநீர் (Pirappankizhankathi Kudineer)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | அமுக்கரா (சுத்தி) | අමුක්කරා | *Withania somnifera* | 40 g |
| 02 | பறங்கிக்கிழங்கு | චීන අල | *Smilax chinensis* | 40 g |
| 03 | இயங்கம் வேர் | කටුනියඳ | *Azima tetracantha* | 40 g |
| 04 | பிரப்பங்கிழங்கு | වේවැල්අල | *Calamus tenuis* | 40 g |
| 05 | வட்டுக்கத்தரி வேர் | එළවටු මුල් | *Solanum surattense* | 40 g |
| 06 | கொடிவேலி | එළනිටුල් | *Plumbago zeylanica* | 40 g |
| 07 | சாரணை வேர் | සාරණ මුල් | *Trianthema decandra* | 20 g |
| 08 | தூதுவளை வேர் | වැල්තිබ්බටු මුල් | *Solanum trilobatum* | 20 g |
| 09 | கண்டங்கத்தரிவேர் | කටුවැල්බටු මුල් | *Solanum xanthocarpum* | 20 g |
| 10 | நன்னாரி வேர் | ඉරමුසු මුල් | *Hemidesmus indicus* | 20 g |
| 11 | கடுகுரோகணி | කටුකරෝසන | *Picrorrhiza kurrooa* | 5 g |
| 12 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 5 g |
| 13 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 5 g |
| 14 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 5 g |
| 15 | வசுவாசி | වසාවාසි | *Myristica fragrans* | 5 g |
| 16 | சிற்றரத்தை | හීන්අරත්ත | *Alpinia chinensis* | 5 g |
| 17 | சாதிக்காய் | සාදික්කා | *Myristica officianalis* | 5 g |
| 18 | கராம்பு | කරාබු නැටි | *Syzygium aromaticum* | 5 g |
| 19 | செவ்வள்ளி | වැල්මදට | *Rubia Cordifolia* | 5 g |
| 20 | வாய்விடங்கம் | වළඟසාල් | *Embelia Ribes* | 5 g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
மேலெழுந்த வாதத்தை சமப்படுத்தி அபான வாயுவை சீர்செய்யும்.

**செய்கை (Action)**
தாபிதமகற்றி (Anti inflammatory), வாதசமனி (Anti Vatha)

**தீரும் நோய்கள் (Indications)**
வாதரோகங்கள்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 30-60 மி.லீ தினம் இரண்டு / மூன்று வேளை சாப்பாட்டிற்கு முன்
(30- 60ml, 2 – 3 times a day before meal)

**Reference:- சித்த மருந்து முறையியல்**

## 33. பித்தசமன லேகியம் (Piththa Samana Lehiyam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 2 Kg |
| 02 | கடுக்காய் | අරළු | *Terminalia chebula* | 80 g |
| 03 | நெல்லிவற்றல் | වියළි නෙල්ලි | *Emblica officianalis* | 80 g |
| 04 | தான்றிக்காய் | බුලු | *Terminalia belerica* | 80 g |
| 05 | கராம்பு | කරාබු නැටි | *Syzygium aromaticum* | 80 g |
| 06 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 80 g |
| 07 | பற்படாகம் | පත්පාඩගම් | *Oldenlandia corymbosa* | 80 g |
| 08 | கோரைக்கிழங்கு | කලාඳුරු අල | *Cyperus rotundus* | 80 g |
| 09 | சிறுநாகம்பூ | නාමල්රේණු | *Mesua ferrea* | 80 g |
| 10 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 80 g |
| 11 | சீந்தில் மா | රසකිඳ | *Tinospora cordifolia* | 80 g |
| 12 | சிற்றாமட்டி | බැබිල | *Sida cordifolia* | 80 g |
| 13 | மல்லி | කොත්තමල්ලි | *Coriandrum sativam* | 80 g |
| 14 | இலவங்கப்பட்டை | ලවංගපොතු | *Eugenia caryophylls* | 80 g |
| 15 | இலவங்கப்பத்திரி | ලවංගපත්‍ර | *Eugenia caryophylls* | 80 g |
| 16 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 80 g |
| 17 | வெட்டிவேர் | වෙට්ටිවේර් | Vettivera zeylanica | 80 g |
| 18 | சித்திரமூலம் (சுத்தி) | එළනිටුල් | Plumbago zeylanica | 80 g |
| 19 | இலாமிச்சம் வேர் | සැවැන්දරා මුල් | Plectranths vettiveroides | 80 g |
| 20 | தேன் | මීපැණි | Bee's Honey | 375 ml |
| 21 | நெய் | එළගිතෙල් | Ghee | 1125 ml |
| 22 | சர்க்கரை | හකුරු | Jaggary | 6 Kg |
| 23 | சீனி | සීනි | Sugar | 300 g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**

மிகுந்து காணப்படும் உதானன், அபானன், சமானன் ஆகிய வாயுக்களை சமப்படுத்தும். சீர்கேடடைந்து காணப்படும் குருதிக்கு ஊட்டத்தை தரும். வாயுக்களின் அதிகரிப்பில் ஏற்படும் வயிற்றுப் பொருமல், வலி, வாந்தி முதலியவற்றை நீக்கும்.

**செய்கை (Action)**

செரிப்புண்டாக்கி (Digestive), உள் அழல் ஆற்றி (Demulcent), ஈரல் உரமாக்கி(Hepato tonic), குளிர்ச்சியுண்டாக்கி (Refrigerant).

**தீரும் நோய்கள் (Indications)**
அக்கினி மாந்தம், எரிகுன்மம், காமாளை, சோபை, வெள்ளை, நீர்ச்சுருக்கு

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 2-5கி தினம் இரு வேளை, சாப்பாட்டிற்கு முன் (2-5g , 2 times a day before meal)

**அனுபானம் (Adjuvant)**
பால்/வெந்நீர் (Milk/Warm water)

**Reference :- சித்த மருந்து முறையியல்**

## 34. அமுக்கரா லேகியம் (Amukkara Lehiyam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | அமுக்கரா | අමුක්කරා | *Withania somnifera* | 60 g |
| 02 | நிலப்பூசணிக் கிழங்கு | බතලවැල් අල | *Pueraria tuberosa* | 60 g |
| 03 | நன்னாரி | ඉරමුසු | *Hemidesmus indicus* | 60 g |
| 04 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 60 g |
| 05 | பறங்கிக்கிழங்கு | චීන අල | *Smilax chinensis* | 60 g |
| 06 | முந்திரிகைவற்றல் | මුද්දරප්පළම් | *Vitis Vinifra* | 50 g |
| 07 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 10 g |
| 08 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 10 g |
| 09 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 10 g |
| 10 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 10 g |
| 11 | நெய் | එළගිතෙල් | *Ghee* | 150 g |
| 12 | தேன் | මීපැණි | *Bee's Honey* | 300 g |
| 13 | சீனி | සීනි | *Sugar* | 600 g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
ஊட்டம் குறைந்த இரசம், குருதி போன்றவற்றிற்கு ஊட்டம் அளிக்கும். கேடடைந்த அனல்பித்தத்தை சீராக்குவதனால் தோலிற்கு அழகைக் கொடுக்கும். பித்தத்தைத் தன்னிலையடையச் செய்வதன் மூலம் வாதம், கபம் ஆகியவற்றைச் சீர்செய்யும். வியானவாயுவை சரிசெய்வதன் மூலம் நரம்புகளுக்கு ஊட்டத்தை அளிக்கும்.

**செய்கை (Action)**

குருதிப்பெருக்கி (Haematinic), நரம்பு உரமாக்கி (Nervine tonic), சுக்கிலதாது பெருக்கி (Increse sperm count), இன்பம்பெருக்கி (Aphrodisiac), செரிப்புண்டாக்கி (digestive), வேதனாசாந்தினி (Analgesic) .

**தீரும் நோய்கள் (Indications)**
பலவீனம், விந்துகுறைவு, பாண்டு, காமாளை, பசியை தூண்டுதல்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 2-5 கி, தினம் இரு வேளை, சாப்பாட்டிற்கு பின்
(2-5g, 2 times a day after meal )

**அனுபானம் (Adjuvant)**
பால்/வெந்நீர் (Milk/Warm water)

**Reference:- சித்த மருந்து முறையியல்**

# 35. நெல்லிக்காய் லேகியம் (Nellikai Lehiyam)

## சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | நெல்லிக்காய் | වියළි නෙල්ලි | *Emblica officianalis* | 840g |
| 02 | அமுக்கரா | අමුක්කරා | *Withania somnifera* | 600 g |
| 03 | கூகைநீறு | අරලුප්පිටි | *Maranta arundinaceae* | 600g |
| 04 | பேரீந்து | රට ඉඳි | | 600 g |
| 05 | முந்திரிகைவற்றல் | මුද්දරප්පළම් | *Vitis Vinifra* | 300 g |
| 06 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 60 g |
| 07 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 60 g |
| 08 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 60 g |
| 09 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 30 g |
| 10 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 30g |
| 11 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 30 g |
| 11 | நெய் | එළගිතෙල් | *Ghee* | 900ml |
| 12 | தேன் | මීපැණි | *Bee's Honey* | 450ml |
| 13 | சர்க்கரை | හකුරු | Jaggary | 240g |
| 14 | சீனி | සීනි | *Sugar* | 4200g |

**கசாயம்**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | நெல்லிக்காய் | වියළි නෙල්ලි | *Emblica officianalis* | 1200g |

**உபயோகம்**:- **(Usage):-** உட்பிரயோகம் (Internal use)

### செயலாற்றும் முறை (Mode of action)

ஊட்டம் குறைந்த இரசம், குருதி போன்றவற்றிற்கு ஊட்டம் அளிக்கும். கேடடைந்த அனல்பித்தத்தை சீராக்குவதனால் தோலிற்கு அழகைக் கொடுக்கும். பித்தத்தைத் தன்னிலையடையச் செய்வதன் மூலம் வாதம், கபம் ஆகியவற்றைச் சீர்செய்யும். வியானவாயுவை சரிசெய்வதன் மூலம் நரம்புகளுக்கு ஊட்டத்தை அளிக்கும்.

### செய்கை (Action)

குருதிப்பெருக்கி (Haematinic), நரம்பு உரமாக்கி (Nervine tonic), சுக்கிலதாது பெருக்கி (Increse sperm count), இன்பம் பெருக்கி (Aphrodisiac), செரிப்புண்டாக்கி(digestive), வேதனாசாந்தினி (Analgesic) நோயெதிர்ப்பு ஆற்றலைக் கூட்டும் (Increse immune), உள்ளழலாற்றி (Demulcent).

**தீரும் நோய்கள் (Indications)**
பலவீனம், விந்துகுறைவு, பாண்டு, காமாளை, பசியை தூண்டுதல்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 2 –5 கி தினம் இரு வேளை, சாப்பாட்டிற்கு பின்
(2 – 5g, 2 times a day after meal )

**அனுபானம் (Adjuvant)**
பால்/ வெந்நீர்
(Milk/Warm water)

**Reference:- சித்த மருந்து முறையியல்**

# 36. ஆடாதோடை கண்டங்கத்தரி லேகியம் (Adathodai Kandankathari Lekiyam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 60 g |
| 02 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 60 g |
| 03 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 60 g |
| 04 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 60 g |
| 05 | கடுக்காய் | අරළු | *Terminalia chebula* | 60 g |
| 06 | நெல்லிக்காய் | වියළි නෙල්லි | *Emblica officianalis* | 60 g |
| 07 | தான்றிக்காய் | බුළු | *Terminalia belerica* | 60 g |
| 08 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 60 g |
| 09 | கராம்பு | කරාබු නැටි | *Syzygium aromaticum* | 60 g |
| 10 | இலவங்கப்பட்டை | ලවංගපොතු | *Eugenia Caryophylls* | 60 g |
| 11 | இலவங்கப்பத்திரி | ලවංගපත්‍ර | *Eugenia Caryophylls* | 60 g |
| 12 | சிற்றரத்தை | හීංඅරත්ත | *Alpinia officinarum* | 60 g |
| 13 | பேரத்தை | මහ අරත්ත | *Alpinia galangal* | 60 g |
| 14 | தாளிசபத்திரி | තාලිසපත්‍ර | *Abies webbiana* | 60 g |
| 15 | சாதிக்காய் | සාදික්කා | *Myristica officianalis* | 60 g |
| 16 | நெய் | එළගිතෙල් | *Ghee* | 375 ml |
| 17 | தேன் | මීපැණි | *Bee's Honey* | 375 ml |
| 18 | சீனி | සීනි | *Sugar* | 1.5Kg |

**கசாயம்**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | கண்டங்கத்தரி | කටුවැල්බටු | *Solanum Xanthocarpum* | 1Kg |
| 02 | துளசி | මදුරුතලා | *Ocimum Tenuiflorum* | 1.4Kg |
| 03 | ஆடாதோடை இலை | ආඩතෝඩාකොළ | *Adathodavasicca* | 2Kg |
| 04 | தூதுவளை | වැල්තිබ්බටු | *Solanum Trilobatum* | 700g |
| 05 | இக்கிரி | කටුනෙළු | *Barleria mysorensis* | 700g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**

கபம் மிகுந்து தொண்டை மூக்கு, காது, மார்பு, மண்டை போன்றவற்றில் தேங்குவதை தடுக்கும். கபத்தால் மிகுந்த மேல் நோக்குங் காலை சமப்படுத்துவதனால் இருமலை நீக்கும். நுரையீரற்குலை போன்றவற்றில் தங்கிய கபத்தை அகற்றும்.

**செய்கை (Action)**

கோழையகற்றி (Expectorant) , இருமலடக்கி (Anti tussive)

**தீரும் நோய்கள் (Indications)**

இருமல், பலவித சுரங்கள், வயிறு நோய்கள், கபநோய்கள், வளி நோய்கள்

**பிரமாணம் (Dosage)**

ரோகநிலைக்கேற்ப 2 – 5 கி தினம் இரு வேளை, சாப்பாட்டிற்கு பின்
(2-5g, 2 times a day after meal )

**அனுபானம் (Adjuvant)**

பால்/வெந்நீர்
(Milk/Warm water)

**Reference :- வட மாகாண சுதேச மருந்து உற்பத்தி பிரிவு முறை**

# 37. ஆடாதோடைப் பாணி (VASAKA SYRUP)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | ஆடாதோடை இலை | ආඩතෝඩාකොළ | *Adathoda vasicca* | 110 g |
| 02 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 100 g |
| 03 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 50 g |
| 04 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 50 g |
| 05 | கண்டங்கத்தரி | කටුවැල්බටු | *Solanum xantho carpum* | 25 g |
| 06 | காட்டாத்திப்பூ | මලිත මල් | *Woodfordia fruticosa* | 25 g |
| 07 | சீனி | සීනි | *Sugar* | 2500 g |
| 08 | மென்தோல் | මෙන්දොල් | *Menthol* | Q.S |
| 09 | பிறிசவேற்றிவ் | පිරිසවෙරිව් | *Preservative* | Q.S |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
கபம் மிகுந்து தொண்டை மூக்கு, காது, மார்பு, மண்டை போன்றவற்றில் தேங்குவதை தடுக்கும். கபத்தால் மிகுந்த மேல் நோக்குங் காலை சமப்படுத்துவதனால் இருமலை நீக்கும். நுரையீரற்குலை போன்றவற்றில் தங்கிய கபத்தை அகற்றும்.

**செய்கை (Action)**
கோழையகற்றி (Expectorant) , இருமலடக்கி (Anti tussive) .

**தீரும் நோய்கள் (Indications)**
இருமல், பலவித சுரங்கள், வயிறு நோய்கள், கபநோய்கள், வளி நோய்கள்

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப வயது வந்தவர்கள் 15 -30 மி.லீ தினம் 2 அல்லது 3 வேளை சிறுவர்களுக்கு (6 வயதிற்குட்பட்டவர்கள், 4 - 8 மி.லீ) (Adults 15-30ml daily 2 or 3 time , Children (below 6 years) 4-8ml.

**அனுபானம் (Adjuvant)**
வெந்நீர் (Warm water)

**Reference :- வட மாகாண சுதேச மருந்து உற்பத்தி பிரிவு முறை.**

## 38. அரபன் பற்பொடி (Arapan Tooth Powder)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | ஆலம்பட்டை | මහනුගපොතු | *Ficus benghalensis* | 600 g |
| 02 | வேலம்பட்டை | කිරිමීඩපොතු | *Acacia leucophloea* | 600 g |
| 03 | காசுக்கட்டி | රත්කිහිරිය | *Acasia catechu* | 400 g |
| 04 | கடுக்காய்பிஞ்சு | ගැටඅරළු | *Terminalia chebula* | 400 g |
| 05 | மாயாக்காய் | මාසක්කා | *Quercus infectoria* | 200 g |
| 06 | கராம்பு | කරාබු නැටි | *Syzygium aromaticum* | 100 g |
| 07 | பாக்கு | පුවක් | *Areca Catechu* | 200 g |
| 08 | படிகாரம் (சுத்தி) | සීනක්කාරම් | Alum | 200 g |
| 09 | மென்தோல் | මෙන්දොල් | *Menthol* | 5 g |

**உபயோகம் (Usage) :-** வெளிப்பிரயோகம் (External use)

### செயலாற்றும் முறை (Mode of action)

பிருதுவி, வாயு பூத அம்சம் நிறைந்தமையால் வாய்க்கு துவர்ப்பு செய்கையை செய்து பற்கூச்சம், முரசு கரைதலை தடுக்கும்.

### செய்கை (Action)

துவர்ப்பி (Astringent)

### தீரும் நோய்கள் (Indications)

முரசு கரைதல், வாய் நாற்றம், பல் ஈறு கரைந்து இரத்தம் வடிதல், பல்லறணை, பற் கூச்சம்.

**Reference :- சித்த மருந்து முறையியல்**

## 39. பாலசஞ்சீவி மாத்திரை (Balasanjeevi Maththirai)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 100g |
| 02 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 100g |
| 03 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 100g |
| 04 | பொரித்த வெண்காரம் | පුෂ්කර | *Sodium biborata* | 100g |
| 05 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 100g |
| 06 | கராம்பு | කරාබු නැටි | *Syzygium aromaticum* | 100g |
| 07 | லிங்கம் (சுத்தி) | සාදිලිංගම් | *Red sulphide of mercury* | 100g |
| 08 | தேசிப்புளி | දෙහි | *Citrus aurantifolia* | Q.S |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
முக்குற்ற அதிகரிப்பை சமன் செய்து கபப் பிரகோபத்தை குறைக்கும். ஜாடராக்கினியை தூண்டி தீபன,பாசன தன்மையைக் கூட்டும்.

**செய்கை (Action)**
செரிப்புண்டாக்கி (Digestive) , கோழையகற்றி (expectorant) ,இருமலடக்கி (Anti tussive), சுரமகற்றி (Antipyretic).

**தீரும் நோய்கள் (Indications)**
சுரம், இருமல், வாந்தி, மாந்தம், கணம், வயிற்றோட்டம், கக்குவான் சுரம்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப ஒரு மாத்திரை (100 மி.கி) தினம் இரு வேளை சாப்பாட்டிற்கு பின்
(1 Tablet 2 times a day After meal)

**அனுபானம் (Adjuvant)**
கற்பூரவள்ளிசாறு, துளசிசாறு, வெற்றிலைச் சாறு, இக்கிரி, மல்லி, தூதுவளைக் குடிநீர்
(Katpooravalli juice/ Thulasi juice/ Betel juice).

**Reference:- கண்ணுச்சாமிப்பிள்ளை சிகிச்சா இரத்தினதீபம்.**

## 40. சின்னச் சிவப்பு மாத்திரை (Sinna Sivappu Maththirai)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | வெண்கோட்டம் | සුවඳකොට්ටම් | *Saussurea lappa* | 100g |
| 02 | வட்சநாபி (சுத்தி) | වච්චනාවි | *Aconitum ferox* | 100g |
| 03 | சாதிலிங்கம் (சுத்தி) | සාදිලිංගම් | *Red sulphide of mercury* | 100g |
| 04 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 100g |
| 05 | சிற்றரத்தை | හීන්අරත්ත | *Alpinia officinarum* | 100g |
| 06 | கராம்பு | කරාබු නැටි | *Syzygium aromaticum* | 100g |
| 07 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 100g |
| 08 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 100g |
| 09 | வசம்பு | වදකහ | *Acorus calamus* | 100g |
| 10 | பொரிகாரம் | පුස්කර | *Sodium biborata* | 100g |
| 11 | இஞ்சிச்சாறு | ඉඟුරු | *Zingeber officianale* | Q.S |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
உதான, பிராண வாயுக்களை நன்னிலைப்படுத்தும். வாதத்துடன் சேர்ந்து கோளாறடைந்த பித்தத்தையும் சமநிலைப்படுத்தும்.

**செய்கை (Action)**

சுரமகற்றி (Antipyretic), இசிவகற்றி (Anti Spasmodic).

**தீரும் நோய்கள் (Indications)**
நெஞ்சடைவாயு, நெஞ்சு படபடப்பு, சுரம், இருமல், சுவாசக் குத்து, இளைப்பு

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1-2 (130 மி.கி) மாத்திரை தினம் இருவேளை/மூன்றுவேளை
சாப்பாட்டிற்கு பின் (1-2 Pill, (130mg) 2-3 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
வெற்றிலைச் சாறு, இஞ்சிச் சாறு, தேன்,தாய்ப் பால், இக்கிரி, மல்லி, தூதுவளைக் குடிநீர் (Betel juice, Ginger juice, Honey, Breast milk)

**Reference:- சுதேச வைத்திய அவுடத திரட்டு**

# 41. தக்காளிச்சாற்று கோரோசனை மாத்திரை
# (Thakkali Saattu Korosanai Maththirai)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | கோரோசனை | ගෝරෝචන | *Calculus bovis* | 100g |
| 02 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 100g |
| 03 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 100g |
| 04 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 100g |
| 05 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 100g |
| 06 | சாதிக்காய் | සාදික්කා | *Myristica officianalis* | 100g |
| 07 | சிற்றரத்தை | හීන්අරත්ත | *Alpinia officinarum* | 100g |
| 08 | வசம்பு | වදකහ | *Acorus calamus* | 100g |
| 09 | உள்ளி | සුදුළූණු | *Allium sativum* | 100g |
| 10 | குங்குமப்பூ | කුංකුමප්පු | *Crocus sativus* | 100g |
| 11 | பச்சைக்கற்பூரம் | වණ්ඩුකපුරු | *Crude camphor* | 100g |
| 12 | கணிதபேதி | ශාස්තුවේදි | *Bitumen* | 100g |
| 13 | சாதிலிங்கம் | සාදිලිංගම් | *Red sulphide of mercury* | 100g |
| 14 | இரசகற்பூரம் | රසකපුරු | *Mercurous chloride* | 25 g |
| 15 | மணித்தக்காளிச் சாறு | කලුකැම්මේරිය | *Solanum nigram* | Q.S |
| 16 | வெற்றிலைச்சாறு | බුලත් | *Piper betal* | Q.S |
| 17 | கற்பூரவள்ளிசாறு | කප්පරවල්ලිය | *Anisochilus carnosus* | Q.S |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் சிறுவர்கட்கு (Internal use for infant )

**செயலாற்றும் முறை (Mode of action)**
பொதுவாக சிறுபிள்ளைகளுக்கு பருவநிலை மாற்றத்தால் அதிகரிக்கும் கபம், பித்தம் ஆகியவற்றை சமப்படுத்தும். ஜாடராக்கினியை அதிகரித்து தாதுக்களை நல்ல நிலையில் பேணும்.

**செய்கை (Action)**

கோழையகற்றி (expectorant) , இலகுமலகாரி (Laxative) , செரிப்புண்டாக்கி (Digestive) , இசிவகற்றி (Anti Spasmodic)

**தீரும் நோய்கள் (Indications)**
சிறுபிள்ளைகளுக்கு ஏற்படும் கிரந்தி, இருமல், சளிக்கட்டு, கிரந்திக் கொதி

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1-2 மாத்திரை, தினம் இருவேளை/மூன்றுவேளை
(1-2 Pill , 2-3 times a day)

**அனுபானம் (Adjuvant)**
முலைப் பால், கற்பூரவள்ளிசாறு, தேன், இக்கிரி, துளசி,கற்பூரவள்ளிகுடிநீர், வெங்காயம் அவித்தநீர், தேன் (Breast milk, Katpooravalli juice, Honey / Onion Kudineer, Honey)

**Reference :- சித்த மருந்து முறையியல்**



குங்குமப்பூ ***(Crocus sativus)***

## 42. பலவாயுக் குளிகை (Palavaayu Kulikai)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S. N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 10 g |
| 02 | சாதிக்காய் | සාදික්කා | *Myristica officianalis* | 10 g |
| 03 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 10 g |
| 04 | உள்ளி | සුදුළූණු | *Allium Sativum* | 10 g |
| 05 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 10 g |
| 06 | கருஞ்சீரகம் | කළුදුරු | *Nigella sativa* | 10 g |
| 07 | திற்பலி மூலம் | තිප්පිලිමුල් | *Piper longum* | 10 g |
| 08 | கராம்பு | කරාබු නැටි | *Syzygium aromaticum* | 10 g |
| 09 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 10 g |
| 10 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 10 g |
| 11 | இலவங்கப்பட்டை | ලවංගපොතු | *Eugenia caryophylls* | 10 g |
| 12 | வெந்தயம் | උළුහාල් | *Trigonella foenumgraefum* | 10 g |
| 13 | கடுகு | අබ | *Brassica alba boiss* | 10 g |
| 14 | சந்தனம் | සුදුහඳුන් | *Santalum alba* | 10 g |
| 15 | ஊசிக்காந்தம் | කාන්දම් | *Magnatic iron* | 10 g |
| 16 | நேர்வாளம் | ජයපාල | *Croton tinglium linn* | 10 g |
| 17 | இந்துப்பு | සහිඳලුණු | *Sodium chloride impura* | 10 g |
| 18 | வெண்காரம்(சுத்தி) | පුෂ්කර | *Sodium biborata* | 10 g |
| 19 | பாற்பெருங்காயம் | පෙරුම්කායම් | *Ferula asafoetida* | 10 g |
| 20 | சீனாக்காரம் | සීනක්කාරම් | *Aluminium potassium sulphate* | 10 g |
| 21 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | Q.S |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
வாயுக்களின் பாதையில் ஏற்படும் தடையை நீக்கி பஞ்ச வாயுக்களின் ஓட்டத்தை சீர்படுத்தும்.

**செய்கை (Action)**
இலகுமலகாரி (laxative) இசிவகற்றி(Anti spasmodic), வேதனாசாந்தினி( Analgesic), அகட்டுவாயுவகற்றி(carminative), பசித்தீதூண்டி(Digestive)

**தீரும் நோய்கள் (Indications)**
செரியாமை, பசியின்மை, வயிற்றுவலி, வாதகுன்மம், கெற்பவாயு, வாயுக்கோளாறுகள்,வாத நோய்கள்

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1-2 மாத்திரை தினம் காலை மட்டும்.
**(**1-2 Pill morning only)

**அனுபானம் (Adjuvant)**
சுக்குகுடிநீர் /உள்ளி அவித்த நீர் **(**Dry Ginger decoction/Garlic decoction)

**Reference:- சுதேச வைத்திய அவுடத திரட்டு.**



நேர்வாளம் ***(Croton tinglium)***

# 43. பலவாயுக் குளிகை (நேர்வாளம் சேராதது)
# (Palavaayu Kulikai Without Nervalam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 10 g |
| 02 | சாதிக்காய் | සාදික්කා | *Myristica officianalis* | 10 g |
| 03 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 10 g |
| 04 | உள்ளி | සුදුළූණු | *Allium Sativum* | 10 g |
| 05 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 10 g |
| 06 | கருஞ்சீரகம் | කළුදුරු | *Nigella sativa* | 10 g |
| 07 | திற்பலி மூலம் | තිප්පිලිමුල් | *Piper longum* | 10 g |
| 08 | கராம்பு | කරාබු නැටි | *Syzygium aromaticum* | 10 g |
| 09 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 10 g |
| 10 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 10 g |
| 11 | இலவங்கப்பட்டை | ලවංගපොතු | *Eugenia caryophylls* | 10 g |
| 12 | வெந்தயம் | උළුහාල් | *Trigonella foenumgraefum* | 10 g |
| 13 | கடுகு | අබ | *Brassica alba boiss* | 10 g |
| 14 | சந்தனம் | සුදුහඳුන් | *Santalum alba* | 10 g |
| 15 | ஊசிக்காந்தம் | කාන්දම් | *Magnatic iron* | 10 g |
| 16 | இந்துப்பு | සහිඳලුණු | *Sodium chloride impura* | 10 g |
| 17 | வெண்காரம்(சுத்தி) | පුස්කර | *Sodium biborata* | 10 g |
| 18 | பாற்பெருங்காயம் | පෙරුම්කායම් | *Ferula asafoetida* | 10 g |
| 19 | சீனாக்காரம் | සීනක්කාරම් | *Aluminium potassium sulphate* | 10 g |
| 20 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | Q.S |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
வாயுக்களின் பாதையில் ஏற்படும் தடையை நீக்கி பஞ்ச வாயுக்களின் ஓட்டத்தை சீர்படுத்தும்.

**செய்கை (Action)**
இலகுமலகாரி (laxative), இசிவகற்றி (Antispasmodic), வேதனாசாந்தினி ( Analgesic), அகட்டுவாயுவகற்றி (carminative), பசித்தீதூண்டி (Digestive)

**தீரும் நோய்கள் (Indications)**
செரியாமை, பசியின்மை, வயிற்றுவலி, வாதகுன்மம், கெற்பவாயு, வாயுக்கோளாறுகள்,வாத நோய்கள்

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1-2 மாத்திரை தினம் இருவேளை/மூன்றுவேளை
**(**1-2 Pill, 2 – 3 times a day)

**அனுபானம் (Adjuvant)**
சுக்குகுடிநீர் /உள்ளி அவித்த நீர் **(**Dry Ginger decoction/ Garlic decoction)

**Reference:- வட மாகாண சுதேச மருந்து உற்பத்தி பிரிவு முறை**




**கருஞ்சீரகம் (*Nigella sativa)***

## 44. சுவாசக் குடோரி மாத்திரை (Suvasak Kudori Maththirai)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | வெள்ளெருக்கம்பூ | වරාමල් | *Calotropis procera* | 120 g |
| 02 | வெண்மிளகு | සුදු ගම්මිරිස් | Pipar nigrum | 120 g |
| 03 | தாளிசபத்திரி | තාලිසපත්‍ර | *Abies webbiana* | 200 g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
வாத பித்த தோஷங்கள் கபத்தை பெருகச் செய்து உதான,பிராண வாயுக்களின் சமநிலையை கேடடையச் செய்து, அவற்றின் பாதையை தடை செய்வதை தடுக்கும். பிராண வாயுவின் பாதையில் காணப்படும் கபத்தை அகற்றி, பிராணனின் ஓட்டத்தை சீர்படுத்தும்.

**செய்கை (Action)**
இருமல் அடக்கி (Anti tussuve), கோழை இளக்கி (Mucolytic), கோழையகற்றி (Expectorant) தாபிதமகற்றி (Anti inflammatory) மூக்குநீரடக்கி (Anti catarrhal ).

**தீரும் நோய்கள்: (Indications)**
இருமல், இளைப்பு, அரோசகம், தடிமன், சுரம், அக்கினிமாந்தம்.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1-2 மாத்திரை தினம் இருவேளை/மூன்றுவேளை சாப்பாட்டிற்கு பின்
(1 – 2 Pill , 2-3 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
தாளிசபத்திரிக் குடிநீர் (Abies webbiana decoction)

**Reference :- சித்த வைத்திய திரட்டு**

## 45. நீர்க்கோவை மாத்திரை (Neerkovai Maththirai)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | கப்புமஞ்சள் | වියළි කහ | *Curcuma domastica* | 100g |
| 02 | கஸ்தூரி மஞ்சள் | කස්තුරි කහ | *Curcuma aromatica* | 100g |
| 03 | பொரிகாரம் | පුස්කර | *Sodium biborata* | 50g |
| 04 | சாம்பிராணி | සාම්පරාණි | *Styrax benzoin* | 50g |
| 05 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 50g |
| 06 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 50g |
| 07 | சாதிக்காய் | සාදික්කා | *Myristica officianalis* | 50g |
| 08 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 25g |
| 09 | இலவங்கப்பட்டை | ලවංගපොතු | *Eugenia caryophylls* | 25g |
| 10 | கற்பூரம் | වණ්ඩුකපුරු | *Camphor* | 25g |
| 11 | தேசிப்புளி | දෙහි | *Citrus aurantifolia* | Q.S |

**உபயோகம் (Usage) :-** வெளிப்பிரயோகம் (External use) - தேசிப்புளியில் உரைத்து நெற்றியில் பற்றிடுக.

**செயலாற்றும் முறை (Mode of action)**
தலையில் நீரேற்றத்தை குறைத்து, கப அதிகரிப்பை தடுக்கும்.

**செய்கை (Action)**

தாபிதமகற்றி (Anti inflammatory) ,வேதனாசாந்தினி (Analgesic)

**தீரும் நோய்கள்(Indications)**

பீனிசம், ஒற்றைத்தலைவலி, தலைவலி

**Reference:- சித்த வைத்திய திரட்டு**

## 46. காக்கணவன் மாத்திரை (Kaakkanavan Maththirai)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | காக்கணவன் வேர் | කටරොඩුමුල් | Clitoria ternata | 100g |
| 02 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 25g |
| 03 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 25g |
| 04 | கண்டங்கத்தரிவேர் | කටුවැල්බටුමුල් | *Solanum xanthocarpum* | 25g |
| 05 | நேர்வாளம் | ජයපාල | *Croton tinglium* | 50g |
| 06 | இரசகர்ப்பூரம் | රසකපුරු | *Rasakapuru* | 50g |
| 07 | சாதிலிங்கம் | සාදිලිංගම් | Cinnabar | 50g |
| 08 | தேசிப்புளி | දෙහි | *Citrus aurantifolia* | Q.S |

**உபயோகம்:- (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
அக்கினி மாந்தத்தால் ஏற்படும் மாந்தம், மலக்கட்டு என்பன நீங்கும்.

**செய்கை (Action**
செரிப்புண்டாக்கி (Digestive) இலகுமலகாரி (laxative) புழுக்கொல்லி ( Anthelmintic )
இசிவகற்றி (Antispasmodic) குடற்புழுவகற்றி (Vermifuge)

**தீரும் நோய்கள் (Indications)**
மாந்தம், மலக்கட்டு, குடற் பூச்சிகள்

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 01- 02 மாத்திரை காலையில் மட்டும் (01 – 02 Pill morning only)

**அனுபானம் (Adjuvant)**
ஓமக் குடிநீர் குடிநீர் / சுக்குகுடிநீர் (Ooma kudineer / Dry Ginger kudineer)

**Reference:- சித்த மருந்து முறையியல்**

## 47. உரை மாத்திரை (Urai Maththirai)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 75 g |
| 02 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 80 g |
| 03 | அக்கராகாரம் | අක්කරපට්ටා | *Anacyclus pyrethrum* | 30 g |
| 04 | வசம்பு | වදකහ | *Acorus calamus* | 30 g |
| 05 | சாதிக்காய் | සාදික්කා | *Myristica officianalis* | 30 g |
| 06 | மாயாக்காய் | මාසක්කා | *Quercus infectoria* | 50 g |
| 07 | கடுக்காய் | අරළු | *Terminalia chebula* | 50 g |
| 08 | பெருங்காயம் | පෙරුංකායම් | *Ferula asafoetida* | 50 g |
| 09 | உள்ளி | සුදුළූණු | *Allium sativum* | 50 g |
| 10 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 25 g |

**உபயோகம் (Usage):-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
உணவுப் பாதையில் ஏற்படும் கோளாறுகளை சரி செய்து சமிபாட்டை தூண்டி அன்னரசம் சப்த தாதுகளுக்கு செல்வதை துரிதப்படுத்தி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். உணவு செயல்களால் மந்தப்பட்ட ஜாடராக்கினியை அதிகப்படுத்தி தோஷங்களை நன்னிலையில் பேணும்.

**செய்கை (Action):-**

காயகல்பம் ( Immuno modulator), உடல் உரமாக்கி (General Tonic).

**தீரும் நோய்கள்:- (Indications)**
மாந்தம், சமிபாடின்மை, கழிச்சல், சுரம், கிரந்தி

**பிரமாணம்:- (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1-2 மாத்திரை தினம் இருவேளை/மூன்றுவேளை
(1 – 2 Pill 2 – 3 times a day )

**அனுபானம் (Adjuvant) -**
தாய்ப்பால் (Breast milk)

**Reference:- Pharmacopoeia of Hospital of Indian Medicine**

## 48. முருக்கம்வித்து மாத்திரை (Murukkam Viththu Maththirai)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 50g |
| 02 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 50g |
| 03 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 50g |
| 04 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 50g |
| 05 | கடுகுரோகிணி | කටුකරෝසන | *Picrorrhizakurrooa* | 50g |
| 06 | பலாசம்வித்து | කේළඇට | *Butea monosperma* | 50g |
| 07 | நேர்வாளம் (சுத்தி) | ජයපාල | *Croton Tinglium Linn* | 300g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode Of Action)**
அபானவாயுவின் போக்கை அதிகரித்து குடலில் உள்ள புழுக்களை அகற்றும்

**செய்கை (Action)**

பெருமலம்போக்கி (Purgative ), புழுக்கொல்லி (Vermifuge)

**தீரும் நோய்கள்:- (Indications)**
குடற் கிருமிகள்,மாந்தம்,சீதக்கட்டு,வயிற்று உப்பிசம்

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 1 - 2 மாத்திரை அதிகாலை வெறுவயிற்றில்
(01 – 02 Pill early morning empty stomach)

**அனுபானம் (Adjuvant)**
பனை வெல்லம் / இளநீர் /பசுநெய் /பால்/ சீனி
(Palm jaggery/ King coconut/ Cow Ghee/ Sugar)

**Reference:-** சித்த வைத்திய திரட்டு

## 49. புன்னை வேர்க்குளிகை (Punnai Ver Kulikai)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | ஊசிக்காந்தம் | කාන්දම් | *Magnatic Iron* | 10 g |
| 02 | சாதிலிங்கம் | සාදිලිංගම් | *Red sulphide of mercury* | 10 g |
| 03 | வெண்காரம் | පුෂ්කර | *Sodium biborata* | 10 g |
| 04 | கல்மதம் | ගල්ආගම | *stone religion* | 10 g |
| 05 | சாத்திரபேதி | ශාස්ත්‍රවේදි | *Bitumen* | 10 g |
| 06 | பெருங்காயம் | පෙරුංකායම් | *Ferula asafoetida* | 10 g |
| 07 | கோரைக்கிழங்கு | කලාඳුරු අල | *Cyperus rotandus* | 10 g |
| 08 | வெண்கோட்டம் | සුවඳකොට්ටම් | *Saussurea lappa* | 10 g |
| 09 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 10 g |
| 10 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 10 g |
| 11 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 10 g |
| 12 | அதிமதுரம் | වැල්මී | *Glycyrrhiza glabra* | 10 g |
| 13 | புன்னைவேர்பட்டை | දොඹ මුල් පොතු | *Calophyllum inophyllum* | 50 g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
பித்த அதிகரிப்பைக் குறைத்து சுரம்,உட்குத்து, காசம் போன்றவற்றைக் குறைக்கும்

**செய்கை (Action)**

தாபிதமகற்றி (Anti inflammatory), வேதனாசாந்தினி (Analgasic)
சுரமகற்றி ( Anti pyretic )

**தீரும் நோய்கள்:- (Indications)**
வாய்வு, சுரம், தேக உளைச்சல், நெஞ்சு குத்து, வாதவலி, கபரோகங்கள்

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப பாலர்கட்கு 1 - 2 மாத்திரை பெரியவர்கட்கு 2 - 4 மாத்திரை தினம் இருவேளை/மூன்றுவேளை சாப்பாட்டிற்கு பின் (Children 1 – 2 Pill Adult 2 – 4 pills 2-3 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**

இஞ்சிசாறு/ தேன் / தாய்ப்பால் (Ginger juice/ Honey/ Breast milk)

**Reference:- சித்த மருந்து முறையியல்**

# 50. வெள்ளை வெங்காய குளிகை (Vellai Vengaya Kulikai)

## சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | சாதிக்காய் | සාදික්කා | *Myristica officianalis* | 5 g |
| 02 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 5 g |
| 03 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 5 g |
| 04 | வெந்தயம் | උළුහාල් | *Trigonella foenum graefum* | 5 g |
| 05 | அக்கரகாரம் | අක්කරපට්ටා | *Anacyclus pyrethrum* | 5 g |
| 06 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 5 g |
| 07 | சுக்கு | වියළි ඉඟුරු | *Zingeberofficianale* | 5 g |
| 08 | கடுகுரோகிணி | කටුකරෝසන | *Picrorrhizakurrooa* | 5 g |
| 09 | வசம்பு | වදකහ | *Acorus calamus* | 5 g |
| 10 | வெண்கோட்டம் | සුවඳකොට්ටම් | *Inula Racenosah* | 5 g |
| 11 | கராம்பு | කරාබු නැටි | *Syzygium aromaticum* | 5 g |
| 12 | இலவங்கப்பட்டை | ලවංගපොතු | *Eugenia Caryophylls* | 5 g |
| 13 | கறுவா | කුරුඳුපොතු | *Cinnomomum zeylanicum* | 5 g |
| 14 | கடுக்காய் | අරළු | *Terminalia chebula* | 5 g |
| 15 | சதகுப்பை | සතකුප්ප | *Anethum graveolens* | 5 g |
| 16 | சிற்றரத்தை | හීන්අරත්ත | *Alpinia chinensis* | 5 g |
| 17 | மல்லி | කොත්තමල්ලි | *Coriandrum sativam* | 5 g |
| 18 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 5 g |
| 19 | வசுவாசி | වසාවාසි | *Myristica fragrans* | 5 g |
| 20 | பெருஞ்சீரகம் | මහදුරු | *Foeniculum vulgare* | 5 g |
| 21 | நற்சீரகம் | සූදුරු | *Cuminum cyminum* | 5 g |
| 22 | கருஞ்சீரகம் | කළුදුරු | *Nigella sativa* | 5 g |
| 23 | பாற்பெருங்காயம் | පෙරුම්කායම් | *Ferulaasafoetida* | 5 g |
| 24 | கடுகு | අබ | *Brassica Alba Boiss* | 5 g |
| 25 | வெளுத்தல் பிசின் | ගම්මාලුකිරි | *Pterocarpus Marsupium* | 5 g |
| 26 | கல்லுப்பு | ලුණු ස්ඵටික | *Sodium Chloride – Himalayal Salt (not Pink)* | 5 g |
| 27 | இந்துப்பு | සහිඳලුණු | *Sodium Chloride Impura* | 5 g |
| 28 | ஊசிக்காந்தம்(சுத்தி) | කාන්දම් | *Magnatic Iron* | 5 g |
| 29 | பொரிகாரம் | පුස්කර | *Sodium biborata* | 5 g |
| 30 | வெண்காரம்(சுத்தி) | පුස්කර | *Sodium biborata* | 5 g |
| 31 | உள்ளி | සුදුළූණු | *Allium Sativum* | 50 gram |
| 32 | உத்தமாகாணிச் சாறு | මැඩහඟු | *Daemia extensa* | Q.S |

**உபயோகம்**:- **(Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
உணவுப் பாதையில் ஏற்படும் கோளாறுகளை சரிசெய்து பித்தத்தை சமநிலைப்படுத்தி ஜாடராக்கினியை அதிகரிக்கச் செய்து அபானவாயுவின் போக்கை சீர்செய்யும்

**செய்கை (Action)**

இசிவகற்றி(Antispasmodic), வேதனாசாந்தினி (Analgesic),அகட்டுவாயுவகற்றி(carminative), பசித்தீதூண்டி(Digestive)

**தீரும் நோய்கள் (Indications)**
செரியாமை, பசியின்மை, வயிற்றுவலி, வாதகுன்மம், கெற்பவாயு, வாயுக்கோளாறுகள்,வாத நோய்கள்

**பிரமாணம்**:- **(Dosage)**

ரோகநிலைக்கேற்ப 1(250மி.கி) - 4 மாத்திரைதினம் இருவேளை/மூன்றுவேளை
1(250mg) – 4 Pill 2 – 3 times a day)

**அனுபானம் (Adjuvant)**
வெந்நீர், உள்ளிஅவித்தநீர், தேன் **(***Warm water/ Garlic* decoction/ Honey)

**Reference:- பரராசசேகரம் - கெற்பரோக நிதானம்**

# 51. அன்னபேதிச் செந்தூரம் (Annapethy Chenthooram)

## சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | அன்னபேதி | කසිස් | *FerricSulphas (Green vitriol)* | Q.S |
| 02 | அரிசிக்காடிநீர் | සහල් නිවුඩිඩ ජලය | *Rice Water* | Q.S |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**

அபான வாயுவின் வன்மையை அதிகரிக்கச் செய்யும், கேடடைந்த பரவுகாலை தன்னிலைப்படுத்தும், கல்லீரலை உரமாக்கும்.

**செய்கை (Action)**

ஈரல் உரமாக்கி (Hepato tonic), குருதிப்பெருக்கி (Haematinic).

**தீரும் நோய்கள்:- (Indications)**
பாண்டு, சோபை

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைக்கேற்ப 100-200மி.கி தினம் இருவேளை சாப்பாட்டிற்கு பின் (100 -200mg 2 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
தேன் / நெய் (Honey/ Ghee)

**Reference :- சித்த வைத்திய திரட்டு**

# 52. படிகலிங்கசெந்தூரம் (Padigalinga Chenthooram)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | சாதிலிங்கம் | සාදිලිංගම් | Cinnabar | 35g |
| 02 | படிகாரம் | සීනක්කාරම් | Alum | 280 g |
| 03 | காட்டாத்திப் பூ | මලිත මල් | *Woodfordia fruticosa* | 35 g |
| 04 | கற்கடகசிங்கி | ක්රකටක සෘංගි | *Rhus succedanea* | 105 g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**

மிகுந்த அழல் குற்றத்தையும் அபானவாயுவையும் சீர் செய்யும். கேடடைந்த இரத்தத்தையும், உடற்கட்டுக்களையும் தன்னிலைப்படுத்தும். அழல், ஐயம் கலப்புற்று உருவான குடல் புண்ணை ஆற்றும். வாயு மிகுதியில் ஏற்பட்ட வயிற்று வலி, கடுப்பு முதலியவற்றை நீக்கும்.

**செய்கை (Action)**

துவர்ப்பி (Astringent ), வேதனாசாந்தினி (Analgesic), நுண்ணுயிர்கொல்லி (Antimicrobial)

**தீரும் நோய்கள் (Indications)**
கடுப்புக் கழிச்சல், குருதிக் கழிச்சல், சுரக்கழிச்சல், சீதபேதி, வயிற்றுவலி, சூதக சூலை, பெரும்பாடு

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைமைக்கேற்ப 200-650மி.கி தினம் இருவேளை சாப்பாட்டிற்கு பின் (200 - 650mg 2 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
தேன் / பசுநெய் /மோர் / வெண்ணெய் (Honey/ Cow Ghee/ Buttermilk)

**Reference:- சித்த வைத்திய திரட்டு**

## 53. பூங்காவி செந்தூரம் (Poongavi Chenthooram)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | பூங்காவி | පාර්ක්වි | Aluminium Silicate | 100g |
| 02 | படிகாரம் | සීනක්කාරම් | Alum | 100g |
| 03 | இளநீர் | තැඹිලි | *cocos nucifera(Tender king)* | Q.S |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**

கருப்பையில் அபானவாயுவின் செயலைக் கட்டுப்படுத்தும். துவர்ப்பு செய்கை மூலம் குருதிப் போக்கைக் கட்டுப்படுத்தும்.

**செய்கை (Action)**

துவர்ப்பி (Astringent ), வேதனாசாந்தினி (Analgesic).

**தீரும் நோய்கள் (Indications)**

வெள்ளைசாய்தல், பெரும்பாடு, குருதிக் கழிச்சல், மாதவிடாய்க் கோளாறுகள்.

**பிரமாணம் (Dosage)**

ரோகநிலைமைக்கேற்ப 250-1000மி.கி தினம் இருவேளை சாப்பாட்டிற்கு பின் (250 - 1000mg 2 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**

தேன் /நெய் (Honey/ Ghee)

**Reference :- சித்த வைத்திய திரட்டு**

## 54. ஆறுமுக செந்தூரம் (Aarumuga Senthooram)

**சேரும் பொருட்கள் ( Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | இரசம் | රසදිය | *Mercury* | 50g |
| 02 | கந்தகம் | ගෙන්දගම් | *Sulper* | 90g |
| 03 | வெண்காரம்(சுத்தி) | පුෂ්කර | Sodium biborate | 80g |
| 04 | காந்தம் | කාන්දම් | *Magnetic oxide of iron* | 70g |
| 05 | இந்துப்பு | සහිඳලුණු | *Sodium chloride impura* | 40g |
| 06 | அயம் | යකඩ | *Ferrum* | 120g |
| 07 | கற்றாளைச் சாறு | කෝමාරිකා | *Aloe vera* | Q.S |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
வாதம், பித்தம், கபம் ஆகியவற்றால் ஏற்படும் ரோகங்களில் முத்தோஷத்தையும் சமநிலைக்கு கொண்டுவரக் கூடியது.

**செய்கை (Action)**

தாபிதமகற்றி (Anti inflammatory) , வேதனாசாந்தினி (Analgesic), நரம்புரமாக்கி (Nervine tonic), வாதசமனி (Anti vatha). செரிப்புண்டாக்கி (Digestive), ஈரல் உரமாக்கி (Hepato tonic), உடல்தேற்றி (Alternative)

**தீரும் நோய்கள் (Indications)**
விரைவாதம், அரைவாதம், அறுவகை மூலம், எரிகுன்மம், வறட்சி, அனல், வெடிசூலை, மார்புச் சூலை, கர்ப்பரோகம், பாண்டு, சோகை, கிரந்தி, குடல்வாதம், வாதபித்தம், சயம், அரையாப்பு, அதிசாரம், மண்டையிடி, கொண்டைவலி, கண்டமாலை, வறட்சூலை.

**பிரமாணம் (Dosage)**
ரோகநிலைமைக்கேற்ப 35-65மி.கி தினம் இருவேளை சாப்பாட்டிற்கு பின் (35-65mg 2 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
நெய் / தேன் / திரிகடுகு தூள்
(Ghee/Honey/ Thirikaduku powder)

**Reference:- சித்த வைத்தியத் திரட்டு**

## 55. சிலாச்சத்து பஸ்பம் (Silasaththu Patpam)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | கர்ப்பூரசிலாசத்து | ශිලාජතු | Hydrous calcium sulphate | 300 g |
| 02 | சிறுசெருப்பட்டைச் சாறு | සංදූන් යුෂ | *Coldenia procumbens* | Q.S |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
அபானவாயுவை வன்மையடையச் செய்யும். சிறுநீரகத்திலும் சிறுநீர்ப்பையிலும் உள்ள உப்பைக் கரைக்கும். உடலை குளிர்ச்சியடையச் செய்யும். மூத்திரநாளத்தில் காணப்படும் தாபிதத்தை நீக்கும்.

**செய்கை (Action)**
உள் அழல் ஆற்றி (Demulcent), குளிர்ச்சி உண்டாக்கி (Refrigernt), சிறுநீர் பெருக்கி (Diuretic)

**தீரும் நோய்கள் (Indications)**
உடல் எரிச்சல், வெள்ளை, நீர்க்கட்டு, மூத்திரஎரிவு, மூத்திரகடுப்பு, நீர்த்தாரை வேக்காடு

**பிரமாணம் (Dosage)**
ரோக நிலைமைக்கேற்ப 500-1000மி.கி தினம் இருவேளை சாப்பாட்டிற்கு பின் (500 - 1000mg - 2 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
தேன் /நெய் (Honey/ Ghee)

**Reference :- சித்த வைத்திய திரட்டு**

## 56. குங்கிலிய பஸ்பம் (Kunkiliya Patpam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | வெள்ளைகுங்கிலியம் | හල්දුම්මල | *Shorea - robusta* | 300 g |
| 02 | இளநீர் | තැඹිලි | *cocos nucifera(Tender king)* | Q.S |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**
அபானவாயுவை வன்மையடையச் செய்யும். சிறுநீரகத்திலும் சிறுநீர்ப்பையிலும் உள்ள உப்பைக் கரைக்கும். உடலை குளிர்ச்சியடையச் செய்யும். மூத்திர நாளத்தில் காணப்படும் தாபிதத்தை நீக்கும்.

**செய்கை (Action)**

உள் அழல் ஆற்றி (Demulcent), குளிர்ச்சி உண்டாக்கி (Refrigernt), சிறுநீர் பெருக்கி (Diuretic), தாபிதமகற்றி (Anti inflamatory)

**தீரும் நோய்கள் (Indications)**
வெள்ளை, நீரெரிவு, நீர்க்கட்டு, வெட்டை, மூத்திரநாள அழற்சி, சீதபேதி

**பிரமாணம் Dosage**
நோய்நிலைமைக் கேற்ப 200 –500மி.கி தினம் இருவேளை/மூன்றுவேளை சாப்பாட்டிற்கு பின் (200 – 500mg 2 – 3 times a day after meal)

**அனுபானம் (Adjuvant)**
தேன் /நெய் /இளநீர் / வெண்ணெய் (Honey/ Ghee/ King coconut)

**Reference:- Siddha Pharmacopoeia**

## 57. பலகறைப்பற்பம் (Palakarai Patpam)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | பலகறை | බොහෝ ස්ථාන | *Cypraea moneta* | 1kg |
| 02 | எலுமிச்சம் பழம் | දෙහි | *Citrus aurantifolia* | 50 |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

### செயலாற்றும் முறை (Mode of action)

அதிகரித்த வாதத்தை சமப்படுத்தி அபான வாயுவைத் தூண்டி சிறுநீரை வெளியேற்றும். வாதத்தை சமப்படுத்துவதால் உணவுக் கால்வாய்த் தொகுதியில் ஏற்படும் குன்மத்தை நிவர்த்தி செய்யும். இரத்தத்தை சுத்திகரித்து தூய்மைப்படுத்தும்.

### செய்கை (Action)

இசிவகற்றி (Antispamodic) , உடற்தேற்றி (Alterative), வாதசமனி (Antivata), நஞ்சகற்றி (Antidote), சிறுநீர் பெருக்கி (Diuretic)

### தீரும் நோய்கள்(Indications)

மேகச் சூடு, நீர்க்கட்டு, குன்மம், விஷம், ஒவ்வாமை

### பிரமாணம் (Dosage)

நோய்நிலைமைக்கேற்ப 50 –100மி.கி தினம் இருவேளை, சாப்பாட்டின் பின்
(50 -100mg 2 times a day after meal)

### அனுபானம் (Adjuvant)

நெய் / வெண்ணெய் / மோர் / பால் (Ghee/Butter/Butter milk/ milk)

**Reference :- சித்தவைத்தியத் திரட்டு**

## 58. இடிவல்லாதிமெழுகு (Idivallathy Mezhugu)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | சேராங்கொட்டை(சுத்தி) | සෙංකොට්ටම් | *Semicarpus anacardium* | 100g |
| 02 | எள்ளு | තල | *Sesamum indicum* | 100g |
| 03 | கொப்பராதேங்காய் | කොට්ටාපොල් | *Cocos nucifera* | ½nos |
| 04 | பறங்கிப் பட்டை | චීනඅල | *Smilax chinensis* | 10g |
| 05 | அமுக்கரா (சுத்தி) | අමුක්කරා | *Withania somnifera* | 10g |
| 06 | சித்திரமூலம் (சுத்தி) | එළනිටුල් | *Plumbago zeylanica* | 10g |
| 07 | கஸ்தூரி மஞ்சள் | කස්තුරි කහ | *Curcuma Aromatica* | 10g |
| 08 | கருஞ்சீரகம் | කළුදුරු | *Nigella sativa* | 10g |
| 09 | வாலுளுவை | දුහුදු | *Celastrus panniculatus* | 10g |
| 10 | குரோசாணிஓமம் | කොරොසානි | *Hyoscyamus niger* | 10g |
| 11 | ஓமம் | අසමෝදගම් | *Carum copticum* | 10g |
| 12 | வெற்றிலைக் காம்பு | බුලත් නැටි | *Piper betle* | 10g |
| 13 | கடுக்காய் தோல் | අරළු | *Terminalia chebula* | 10g |
| 14 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 10g |
| 15 | வெண்கோட்டம் | සුවඳකොට්ටම් | *Saussurea lappa* | 10g |
| 16 | இரசகற்பூரம் (சுத்தி) | රසකපුරු | *Rasakapuru* | 5g |
| 17 | பனை வெல்லம் | තල්සූකිරි | *Palm jaggery* | 50g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

**செயலாற்றும் முறை (Mode of action)**

கேடடைந்த பித்த, வாத தோஷங்களை தன்னிலைப்படுத்தி இதன் விளைவால் ஏற்பட்ட நோய்களைப் பரிகரணம் செய்யும்.

**செய்கை (Action)**

அழுகலகற்றி (Antiseptic), குருதிபெருக்கி (Blood tonic), வேதனாசாந்தினி ( Analgesic ), வாதசமனி (Anti vatha), உடல்தேற்றி (Alternative).

**தீரும் நோய்கள் (Indication)**

குஷ்டம், கிரந்தி, சூலை, அரையாப்பு, மேகம், எண்வகைக் குன்மம், சுக்கிலவாய்வு, இரணமேகம்

**பிரமாணம்:- (Dosage)**
300மி.கி தினம் இருவேளை, சாப்பாட்டிற்கு பின் (300mg 2 times a day after meal )

**அனுபானம் (Adjuvant)**
பனை வெல்லம் (palm jaggary)

**பத்தியம்**
வறுத்தஉப்பு (இயங்கமிலையுடன் சேர்த்து வறுத்தது), தயிர், மோர், நெய்,துவரை, பாசிப்பயறு, ஆரைக்கீரை, பொன்னாங்காணிக்கீரை, விளக்கெண்ணெய் தலைக்கு வைத்து ஒருமணி நேரம் சென்ற பின் எண்ணெய் போக சீகைக்காய் தேய்த்து முழுகவும். ஐந்து நாட்களுக்கு ஒருமுறை மருந்தை நிறுத்தி மறு பத்தியம் வைத்து விளக்கெண்ணையில் முழுகி மூன்று முறை மருந்துண்ணவும்.

**அபத்தியம்:**
மீன்

**Reference:- புலிப்பாணி - 500**



**சேராங்கொட்டை (*Semicarpus anacardium*)**

## 59. கந்தக இரசாயனம் (Kanthaga Rasayanam)

**சேரும் பொருட்கள் (Ingredients)**

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | கந்தகம்(சுத்தி) | ගෙන්දගම් | *Sulper* | 100 g |
| 02 | அமுக்காரா (சுத்தி) | අමුක්කරා | *Withania somnifera* | 50 g |
| 03 | பறங்கிக்கிழங்கு (சுத்தி) | චීන අල | *Smilax chinensis* | 20 g |
| 04 | கடுக்காய் | අරළු | *Terminalia chebula* | 10 g |
| 05 | நெல்லிக்காய் | වියළි නෙල්ලි | *Emblica officianalis* | 10 g |
| 06 | தான்றிக்காய் | බුළු | *Terminalia belerica* | 10 g |
| 07 | சுக்கு | වියළිඉඟුරු | *Zingeber officianale* | 10 g |
| 08 | மிளகு | ගම්මිරිස් | *Piper nigram* | 10 g |
| 09 | திற்பலி | තිප්පිලි | *Piper longum* | 10 g |
| 10 | வாய்விடங்கம் | වළඟසාල් | *Embelia ribes* | 10 g |
| 11 | ஏலம் | එනසාල්ඇට | *Elettaria cardamomum* | 10 g |
| 12 | இலவங்கப்பட்டை | ලවංගපොතු | *Eugenia caryophylls* | 10 g |
| 13 | சந்தனத் தூள் | සුදුහඳුන් | *Santalum alba* | 10 g |
| 14 | கடலைப்பருப்பு | *කඩල පරිප්පු* | *Arachis hypogaea* | 10 g |
| 15 | சேங்கொட்டை | කිරිබටුල | *Semicarpus anacardium* | 10 g |
| 16 | சித்திரமூலம் (சுத்தி) | එළනිටුල් | *Plumbago zeylanica* | 10 g |
| 17 | நாட்டுசர்க்கரை | හකුරු | Jaggary | 10 g |
| 18 | சீனி | සීනි | Sugar | 210 g |
| 19 | நெய் | එළගිතෙල් | *Ghee* | 840 g |
| 20 | தேன் | මීපැණි | *Bee's Honey* | 840 g |

**உபயோகம் (Usage) :-** உட்பிரயோகம் (Internal use)

### செயலாற்றும் முறை (Mode of action)

வாத பித்த மேலீட்டால் அபானவாயு கிளர்ந்தெழுந்து, நீர்த் தாரை, மூத்திரக் குண்டிக் காய், மலாசயம் போன்றவற்றைத் தாபிதமடையச் செய்து இரத்தத்தை கெடச் செய்வதால் ஏற்படும் மேக வியாதிகளை தடுத்து வாத பித்த தோஷங்களை தன்னிலைப்படுத்தி அபானவாயுவை தன்னிலையில் பேணச் செய்யும்.

**செய்கை (Action)**

தாபிதமகற்றி (Anti inflammatory), வேதனாசாந்தினி ( Analgasic) , நுண்ணுயிர்க்கொல்லி (Anti microbial), ஈரலுரமாக்கி ( Hepato tonic), உடலுரமாக்கி ( Alterative ).

**தீரும் நோய்கள்(Indications)**
மேகவியாதி, மூத்திரக் கிரீச்சரம், மூத்திரச் சிலந்தி, குட்டம், கிராணி, மூலம், குன்மம், வாதம், வீக்கம்

**பிரமாணம் (Dosage)**
130மி.கி (குன்றிமணிஅளவு) தினம் இருவேளை (130mg 2 times a day)

**அனுபானம் (Adjuvant)**
பனைவெல்லம் (Palm Jaggery)

**Reference :- சித்த வைத்திய திரட்டு**

## 60. தாழங்காய் எண்ணெய் (Thalankay Ennei)

### சேரும் பொருட்கள் (Ingredients)

| S.N | Tamil Name | Sinhala Name | Scientific Name | Quantity |
|---|---|---|---|---|
| 01 | நன்னாரி வேர் | ඉරමුසු | *Hemidesmus indicus* | 10g |
| 02 | கோரைக்கிழங்கு | කලාඳුරු අල | *Cyperus rotundus* | 10g |
| 03 | இலாமிச்சம் வேர் | සැවැන්දරා | *Plectranths vettiveroides* | 10g |
| 04 | வெட்டிவேர் | වෙට්ටිවේර් | *Vettivera zeylanica* | 10g |
| 05 | சிற்றாமட்டி வேர் | බැබිල | *Sida cordifolia* | 10g |
| 06 | பேராமட்டி வேர் | පොඩිකන්බැබිල | *Hibiscus micranthus* | 10g |
